மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 08 வெள்ளிக்கிழமை (23 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 27

அரசுக்கு தலைவர் பிரபா நேற்று பதில்

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்தே முதலில் பேச வேண்டும்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி அதன் பின்பே ஆராய முடியும்

— அலுவலகச் செய்தியாளர்:- ஜீ. குகநாதன் —

யாழ்ப்பாணம், டிசம்பர் 23

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தே முதலில் பேசவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அதன் பின்னரே ஆராய முடியும்.

பேச்சுக் குறித்து விளக்கம் கோரி கடிதம் அனுப்பிய ஸ்ரீலங்கா அரசுக்கு இவ்வாறு திட்டவட்டமாக நேற்று பதில் அனுப்பி வைத்தார் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

ஸ்ரீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு தலைவர் பிரபாகரன் நேற்று அனுப்பி வைத்த கடிதம் நேற்று மாலையே அவருக்குக் கிடைத்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி விட்டு, யுத்தத்தின் மூலவேர்களை ஆராய்ந்து இனப்பிரச்சினைக்

குத் தீர்வு காண்பது குறித்து பேசலாம் என அரசுத் தரப்பில் அனுப்பி வைக்கப்பட்ட இறுதிக் கடிதத்துக்கே தலை

[6 ஆம் பக்கம் பார்க்க]

அரசுடன் பரிமாறிய கடிதங்களை நாம் பகிரங்கப் படுத்துவோம்!

யாழ்ப்பாணம், டிச. 23

தேவைப்பட்டால் — அதற்குரிய காலம் வந்தால் — சந்திரிகா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களைப் பகிரங்கப்படுத்துவோம்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சந்திரிகா அரசுக்கு தலைவர் பிரபாகரன் இதுவரை ஒன்பது கடிதங்களை எழுதியுள்ளார். அவற்றில் சில நீண்டவை. அதற்றைத் தொகுத்தால் ஒரு புத்தகமாக வெளியிட முடியும்.

தலைவர் ஒன்பது கடிதங்களை இக்குறுகிய காலத்துக்குள் அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் என்றால் சமாதான முயற்சி விடயத்தில் அவர் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்த விடயத்தில் நாம் நேர்மையாகச் செயற்படுகின்றோம்; சிக்கல் போடவில்லை.

ஆனால்பேச்சுவார்த்தைக்கு நாம் முட்டுக்கட்டை போடுகின்றோம் என்று அரசு எப்போது கூறுகின்றதோ அப்போது இந்தக் கடிதங்களையும் அரசின் கடிதங்களையும் நாம் பகிரங்கப்படுத்துவோம்.

ஏனென்றால் —

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்வு காண்பதற்கு — போர் நிறுத்தம் செய்வதற்கு —தலைவர் பிரபாகரன் மிகவும் அக்கறையுடன் ஈடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ இராணுவம் இணங்கி வராததால்

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து முதலில் பேசும் விடயத்தில் அரசு பின்வாங்கியது!

யாழ்ப்பாணம், டிச. 23

தமிழ் மக்களின் அன்றாட — நாளாந்த — பிரச்சினைகள் குறித்து முதலில் பேசுவோம் என உறுதியளித்த அரசு —

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வெளியான கூட்டறிக்கையிலும் அதனைத் தெளிவுபடுத்திய அரசு —

இப்போது இராணுவம் அதற்கு இணங்கி வராததால் அதிலிருந்து பின்வாங்கிவிட்டது. அதனை விட்டு விலகி, வெட்டி ஓடி இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுவோம் எனத் தெரிவித்துள்ளது.

— இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

இரு தரப்புப் பேச்சுவார்த்தை தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி குறித்து விளக்குவதற்காக திரு. பாலசிங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச் செல்வனும் நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டினர்.

அந்த மாநாட்டிலேயே திரு. பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் திரு. அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

பேச்சுவார்த்தை. போர் நிறுத்தம் ஆகியவை சம்பந்தமான உண்மை நிலை என்ன?

இவை சம்பந்தமான அரசின் நிலைப்பாடு என்ன?

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன?

இந்த இரண்டு நிலைப்பாடுகளிடையேயும் முரண்பாடு— கருத்து வேறுபாடு — எழுந்துள்ளதா?

இந்த வாரம் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுக்களை அரசு பின்போட்டது ஏன்?

போர் நிறுத்தம் ஏற்படுமா? பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகுமா?

— இப்படி பல கேள்விகள் இன்று எழுந்துள்ளன. அவற்றுக்கு விளக்கமளிக்க வேண்டியிருக்கின்றது.

அரசு பின்னடிக்கிறது

சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்தபோது விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அந்த அரசுக்கு இருந்த ஆவல், அவா எல்லாம் இப்போது தணிந்து போய் — மிகவும் அவதானமாக அதாவது அக்கறை காட்டாமல் —உற்சாகமின்றி —பேச்சுக்களை பின்னிழுத்து — அரசு செயற்படுவது பொதுவாக எல்லோராலும் அவதானிக்கக் கூடிய விடயமாக உள்ளது.

ஏதோ கொழும்பில் குண்டு வெடித்தது, காமினி கொல்லப்பட்டார். இதற்கு புலிகள்

மீது சந்தேகம் எழுந்திருக்கிறது. இதனால் சந்திரிகாவுக்கு பேச்சுக்களில் ஆர்வம் குறைந்திருக்கிறது— என சிலர் கருத்துத் தெரிவிக்கலாம்.

சந்திரிகாவுக்கு சிங்கள மக்கள் கொடுத்த ஆணை

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரம் ஜனாதிபதித் தேர்தலின் போது முடுக்கி விடப்பட்டது. சந்திரிக்காவுக்குப் போடும் வாக்குகள் புலிகளுக்கு போடும் வாக்குகளாகும் என எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்தன. புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் என சந்திரிகா பிரசாரம் செய்தார்.

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஆதரவாகவும், எதிராகவும் ஜனாதிபதித் தேர்தலின் போது முழுமூச்சுடன் பிரசாரம் நடைபெற்றது.

அப்படியிருந்தும் —

பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் காணுவதற்கு சிங்கள மக்கள் பரந்த அளவில் ஆணை (Mandate) ஒன்றை சந்திரிக்காவுக்கு வழங்கினர்.

சிங்கள மக்கள் இத்தகைய ஆணை வழங்கியிருக்கும் போது —

அதற்கு முன்னர் இடம் பெற்ற காமினியின் கொலையைவைத்து பேச்சுவார்த்தை விடயத்தில் சந்திரிகா தளர்ந்து போய் இருப்பதாகக் கூறுவதை ஏற்கமுடியாது

இத்தகைய பரந்த ஆணையை மக்கள் கொடுத்திருப்பதால் சந்திரிகா இந்த விடயத்தில் வேகமாக — உற்சாகமாக செயற்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் இதுவரை பேச்சுவார்த்தைக்குப் பாதகமாக செயற்படவோ அல்லது அறிக்கை விடவோ இல்லை.

எமது தரப்பில் மாற்றமில்லை

முதல் கட்ட பேச்சுக்களில் பங்குபற்றினோம் இரண்டாம் கட்டப் பேச்சுக்கு ஆயத்தமாக இருந்தோம் இப்போதும் போர் நிறுத்தத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் முழு ஆதிக்கம் புலிகளிடம் அவர்களுடன் தான் பேசவேண்டும்

'ரைம்' சஞ்சிகைக்கு சந்திரிகா பேட்டி

லண்டன், டிச. 23

வடக்கில் முழு ஆதிக்கம் (Command) விடுதலைப் புலிகளிடம்தான் இருக்கிறது. நாம் அவர்களுடன் தான் பேச்சுக்களை நடத்தவேண்டியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கு மட்டுமல்ல. நாட்டின் அரசாங்கமாக நாம் உள்ளோம். விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்கள் இந்த வழியில் பார்ப்பார்கள் என்றே நாம் நம்புகின்றோம். தமிழர்களுக்கு சமாதானம் தேவைப்படுகிறது'' — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை இசையச் செய்வதில் ஜனாதிபதி சந்திரிகா வெற்றியீட்டுவா

[6ஆம் பக்கம் பார்க்க]

கிடைத்த கணிசமான வெற்றியாகும்; இந்த ஜனநாயக நடைமுறைதான், கடந்த காலங்களில் ஸ்ரீலங்காவில் இனத்தீயை கொழுந்து விட்டு எரியச் செய்தது

எதிரிடையாகப் பார்த்தால் சந்திரிகாவின் தந்தையாரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டார

[6ஆம் பக்கம் பார்க்க]

அதிகாரங்கள் நிறைந்த மாகாணம் தமிழருக்கு வழங்கப்படவேண்டும்

சந்திரிகா கூறுகிறார்

லண்டன், டிச 23

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக காணி, பொலீஸ் மற்றும் நிர்வாகம் தொடர்பாக பெருமளவு அதிகாரங்கள் நிறைந்த தமிழ் மாகாணம் ஒன்றையே தான் பார்ப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் புகழ் பெற்ற 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

சஞ்சிகையின் சாராபில் அனிதா பிரதாப் ஜனாதிபதியை பேட்டி [illegible] இச்சுயாட்டி [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 23

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

பேரரசி வண்ணச் சோலை
ஸ்தாபனத்தாரின்
கிறிஸ்மஸ் - புதுவருட மகத்தான
மலிவு விற்பனை
23 - 12 - 1994 முதல்
சேலை வகைகள், சேட்டிங், கிப்ஸ் சாரம், பொலியஸ்டர், சீத்தை, பப்ளின், சில்க் பொலியஸ்டர்
இன்னும் பல வகை புடைவைத் தினுசுகள்
○ தரம் உத்தரவாதம் ○
★ இன்றே விஜயம் செய்யுங்கள் ★
பேரரசி வண்ணச் சோலை
(மகாராணி)
யாழ்ப்பாணம். (ஒ-10087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறளை ஆஸ்பத்திரியில்

நோயாளியின் உடல் நிலை விவரம் கணனியில் பதிவு

பொறளை சிறுவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் சேர்க்கப்படும் குழந்தைகளின் சகல விவரங்களையும் கணனியில் பதியும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றில் இத்தகைய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை ஆகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் நோயாளிகள் பற்றிய விவரங்களை சரியாகவும் உடனடியாகவும் அறிந்து கொள்ள முடியும் என்று ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி ஒருவர் கூறினார். (க)

PERSONAL CLASS

இல. 14, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.

A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான சனி, ஞாயிறு வகுப்பு

கணக்கியல்

ஆரம்பம்:
சனி (24-12-94) மு.ப. 10 மணி

By
A. S. A. கலைச்செல்வன்

(34322)

யா / நல்லூர்

இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
(மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

பழைய மாணவர் சங்கம்

வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: 24—12—1994 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணிக்கு
இடம்: பாடசாலை மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயற்குழு

(34319)

நத்தார் பண்டிகையை இனிமையாக கொண்டாடுங்கள்

தரமான
* வான்கோழிகள்,
* இறைச்சிக்கோழிகள்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
மருதம் கோழிப்பண்ணை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(சி-10086)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

மீள் பதிவுக்கான அறிவித்தல்

* யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிறுவனங்கள் / பிரத்தியேக வகுப்புகள்/9 பேருக்கு குறைந்த மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் அனைத்தும் தங்களது பதிவுகளைப் புதுப்பித்தல் வேண்டும்.

* மீள் பதிவுகள் மேற்கொள்ளப்படும் காலம்
26 — 12 — 94 திங்கள் 9-00—12-00 மணிவரை
28 — 12 — 94 புதன் 9-00— 2-30 மணிவரை
30 — 12 — 94 வெள்ளி 9-00—12-00 மணிவரை

* மீள்பதிவுகள் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்.

யாழ். கோட்டம், மருதனார்மடம் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம்
யாழ். மாவட்ட ஒன்றிய அலுவலகம்,
19, செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

வடமராட்சிக் கோட்டம்
சதா பொன்ஸ்,
மாலு சந்தி.

தென்மராட்சிக் கோட்டம்
சஷாந்திஸ்,
23, டச்சு வீதி,
சாவகச்சேரி.

* மீள் பதிவுக்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

* மீள் பதிவு செய்யாத கல்வி நிறுவனங்கள்/பிரத்தியேக வகுப்புகள் 31-12-94இற்கு பின்னர் இயங்க அனுமதிக்கப்படமாட்டா.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(சி-35)

தஞ்சாவூர் தமிழ் மாநாட்டுக்கு

ஈழத்தமிழ் அறிஞர்களை அழைக்கக் கோரி ரிட்மனு!

சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல்

சென்னை, டிச. 23

தஞ்சாவூரில் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெற விருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு இலங்கைத் தமிழ் அறிஞர்களை அழைக்க உத்தரவிடும்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அறிஞர்கள் உட்பட முந்தைய உலக தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்ட அனைத்து தமிழ் அறிஞர்களையும் அழைக்காமல் தஞ்சையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று மாநில அரசுக்கு உத்தரவிடும்படியும் இந்த ரிட் மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஐ-எ)

செஞ்சிலுவை அலுவலகம் மூடப்படும்

யாழ்ப்பாணம், டிச. 23

நத்தார், புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் நாளையும், எதிர்வரும் 31 ஆம் திகதியும் விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ். வலயம் ஒன்றின் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களை எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்குபற்றும் படி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுள்ளார். (ஒ-4)

இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பக்கவாத்திய சங்கீதம் பண்ணிசையும் பக்திப் பாடல்களும் இடம்பெறும்.

இந் நிகழ்ச்சியை திரு. பொன் அப்பையா வழங்குவார். (க-173)

புத்தாண்டை ஒட்டி நகரில் கலகலப்பு

யாழ்ப்பாணம், டிச. 23

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு யாழ் நகரப் பகுதிகளை கட்டியுள்ளது.

உடுபிடைவைகள் மற்றும் உணவுப் பொருள்களை வாங்குவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. நகரில் வழமைக்கு மாறாக சன நெரிசல் காணப்படுகிறது.

இதேவேளை—

கிளாலியூடாக யாழ்.வரும் பயணிகளின் எண்ணிக்கையும் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. (ஐ-12)

விளையாட்டு நிகழ்வு

அமரர் முசீவரத்தினம் ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய வி.க அரியாலை சரஸ்வதி ச.ச.நிலைய மைதானத்தில் நடத்தி வரும் ''செற்-அப்'' முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:—

★ 3 மணிக்கு— மோகனதாஸ் 'ஏ' அணி எதிர் பாரதி வி.க.'ஏ' அணி.

★ 4 மணிக்கு — விக்னேஸ்வரா வி.க. 'ஏ' அணி எதிர் ஆவரங்கால் வி.க. [ஒ]

ஒரே சூலில் 3 குழந்தைகள்!

யாழ்ப்பாணம், டிச. 23

நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் இளம் தாயார் ஒருவர் ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்தார்.

இவற்றுள் ஆண் குழந்தை இறந்து விட்டது. குறைமாத குழந்தைகளான மற்றைய இரு பெண் குழந்தைகளும் இங்குபேற்றரில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சங்கானையைச் சேர்ந்த கிருபாகரன் சாவித்திரி(வயது 28) என்ற பெண்ணே ஒரே சூலில் மூன்று குழந்தைகளை பிரசவித்தவர் ஆவார் (ஐ-15)

நாளை

சண்டிலிப்பாய், டிச. 23

தமிழக முன்னாள் முதல்வர் ''மக்கள் திலகம்'' அமரர் எம். ஜி. இராமச்சந்திரனின் நினைவு தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் மணிமேகன் சனசமூக நிலையம் நடத்தும் நினைவு ஞ்சலிக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ- 135)

ஜனசக்தி மழலை பூங்கா கலை விழா

யாழ்ப்பாணம், டிச. 23

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் கலைவிழாவும், ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை (வெள்ளி) பிற்பகல் 2மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் திரு. க. செல்வநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதியும், சுன்னாகம் பிரதேச செயலர் திரு. தி. கணேஸ்வரனும் கலந்து கொள்வர். (ஐ)

தெரிவு குழுவுக்கு ஐந்நூறு ஆலோசனைகள்

அரசமைப்பை சீர்திருத்தஞ் செய்ய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுகுழுவுக்கு இதுவரை 500 ஆலோசனைகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-6)

வடபகுதிக்கான மருந்து திருமலையில் இறக்கம்

விரைவில் கப்பல் மூலம் வரும்

யாழ்ப்பாணம், டிச. 23

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்குரிய நான்காம் கந்தாய அரைவாசி மருந்து வகைகள் திருகோணமலையில் கப்பல் வசதிக்காக காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'பிளாம்பயான்' கப்பலிலேயே மருத்து வகைகள் முன்னர் சுகாதாரத் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன.

இக்கப்பலில் எடுத்துவரப்பட்ட நான்காம் காலாண்டுக்கான கடைசித் தொகுதி மருந்துவகைகள் பருத்தித்துறையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக திருகோணமலையில் இறக்கி வைக்கப்பட்டிருந்தன.

அடுத்து பருத்தித்துறைக்கு வரும் சரக்கு கப்பலிலேயே இம்மருந்து வகைகள் எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 23

மேஜர் முரளி உட்படபத்து வேங்கைகளின் ஏழாம் ஆண்டு நிறைவு வீரவணக்கக் கூட்டம் இன்று வெள்ளி மாலை 4 மணிக்கு ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறும். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ)

தமிழீழ நிர்வாக சேவையின் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், டிச. 23

அடுத்த ஆண்டு பிரதேச செயலகரீதியாக மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆலோசிப்பதற்கான கலந்துரையாடல்கள் பிரதேச செயலக ரீதியாக ஆரம்பமாகி உள்ளன.

பிரதேச செயலர்கள், உதவித் திட்டப் பணிப்பாளர்கள் ஆகியோரையும்—

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரையும்— இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி ஆலோசனை வழங்குமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

இன்று 23 ஆம் திகதி, 24 ஆம் திகதி, 26 ஆம் திகதி, 27 ஆம் திகதி, 28 ஆம் திகதி, 29 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள கலந்துரையாடல்கள் விவரம்:—

23 ஆம் திகதி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு —உடுவில் பிரதேச செயலகம்

★ பிற்பகல் 2.00 மணிக்கு —தெல்லிப்பளை பிரதேச செயலகம்.

24 ஆம் திகதி:- மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு— சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

★ சித்தன்கேணி கணேசானந்தா வித்தியாலயத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு— சங்கானை பிரதேச செயலகம்.

25 ஆம் திகதி:- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலையில் காலை 10.00 மணிக்கு— கரவெட்டி பிரதேச செயலகம்.

★ பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாசாலையில் பிற்பகல் 2.00 மணிக்கு— பருத்தித்துறை பிரதேச செயலகம்.

27 ஆம் திகதி:- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாசாலையில் காலை 10.00 மணிக்கு — கோப்பாய் பிரதேச செயலகம்.

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2.00 மணிக்கு — சாவகச்சேரி பிரதேச செயலகம்.

28 ஆம் திகதி:- பளை மகா வித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு — பளை பிரதேச செயலகம்.

★ செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பிற்பகல் 2.00 மணிக்கு— மருதங்கேணி பிரதேச செயலகம்.

29 ஆம் திகதி:- நாவலர் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு— யாழ் பிரதேச செயலகம். (இ-க)

புதிய நிவாரண திட்டம்!

வடக்கு - கிழக்கில் பாதிப்படைந்தோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு தயாரித்து வருவதாகவும் —

வீடமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தினால் நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

60ஆம் ஆண்டில் ல. ச. ச. கட்சி!

லங்கா சமசமாஜக் கட்சியின் 59ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு கட்சித் தலைவரும் அமைச்சருமான பெர்னாட் சொய்சா தலைமை வகித்தார்.

அமைச்சர் இந்திக குணவர்த்தனாவும் பேசினார்.

தற்கால சிறப்புகளைக் கொண்ட இலக்கியத்தை படைக்க வேண்டும்

தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம், டிச. 23

''பண்டைக்காலத்தை விட இன்று நாம் மிகக் கூடுதலான நிகழ்வுகளைச் சந்திக்கின்றோம். எனவே இன்றைய எமது சிறப்புகளைக் கொண்ட போராட்ட இலக்கியங்களை எமது எழுத்தாளர்கள் உருவாக்க வேண்டும்.''

யாழ். இலக்கிய வட்டத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு— 1993ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் கடந்த 17ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் விழா நடைபெற்றது.

திரு. இளங்குமரன் மேலும் பேசும் போது கூறியதாவது:

போராளிகள் எழுத்தாளர்களாகவும் இருந்துகொண்டு எமது போராட்டங்கள் குறித்த இலக்கியங்களைப் படைக்கிறார்கள். ஆனால் வெளியில் உள்ள எழுத்தாளர்கள் இந்த மண்ணுக்குத் தேவையான போராட்ட இலக்கியங்களைப் படைக்க முன்வருவதில்லை என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் பேசும்போது கூறியதாவது:

இலக்கியத்தை இலக்கியமாகப் பார்த்து உரிய முறையில் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் யாழ் இலக்கிய வட்டம் வழங்கியுள்ளது. தமிழகத்தின் மிகப் பெரிய தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் ராஜராஜன் விருது கூட செல்வாக்கை மையமாகக் கொண்டு வழங்கப்படுகிறது. [illegible] சிறந்த நூல்களுக்கான ராஜ[illegible] விருதுகள் [illegible] வில்லை. இதுவரை ஜெயலலிதா ஒரு நாவலை எழுதாதது காரணமாக இருக்கலாம்!

திரு. செம்பியன் செல்வன் கலாநிதி க. கனகராசா, வண்ணை கே. சிவராஜா எழுத்தாளர் க. சொக்கலிங்கம் செங்கை ஆழியான் திரு. க. சிவகுருநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

மூத்த எழுத்தாளர் க. சிவகுருநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். இலக்கியப் பேரவை சார்பில் திரு. சொக்கன் பொன்னாடை அணிவித்தார்.

1993 ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முதற்பரிசு வரதர் மூத்த எழுத்தாளர் க. வே. ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

[illegible] வேலு. குமாரசாமியின் தமிழ் வாழ்த்தும் இலக்கிய வட்ட இதழும் இடம் பெற்றன. (க-111)

மரண அறிவித்தல்கள்

சின்னத்தம்பி கைலாசபிள்ளை

யாழ்ப்பாணம் கிடாய் விழுந்தானைச் சேர்ந்த பிரபல கார் ஒப்பந்தக்காரரான சின்னத்தம்பி கைலாசபிள்ளை நேற்று 22 - 12 - 94 காலமானார்.

இவர் பகவதிபின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயில் காட் சுப்பிரமணியம் மற்றும் நவரத்தினமணி ஆகியோரின் சகோதரரும், குணரட்ணம், தியாகராஜா, நகுலேஸ்வரி (கனடா), கோகுணேஸ்வரி, சரோஜினிதேவி, ஸ்ரீவராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகம்மா, இரத்தினேஸ்வரி, பரமநாதன் (கனடா), கதிர்காமநாதன், சண்முகலிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கவிதா, வனிதா, குமுதினி, மிதிலா, தினேபன், ராகுலன், சாதனா, சுகித்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 25 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
கை. குணரட்ணம்

48/5, 1 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (34320)

யோசேப் முடியப்பு
(தம்பு காணிக்கை)

யோசேப் முடியப்பு நேற்று 22 - 12 - 94 ஆம் திகதி காலமாகிவிட்டார். அன்னார் திரேஸ்மலரின் அன்புக் கணவரும், முடியப்பு பிரான்சிஸ் (அதிபர் யாழ். கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி, உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்), கிறேவின், ஜெயா (ஜேர்மனி), வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், லைசா, ஜெனிவ்வா, டக்ளஸ், விமலன், சந்திரிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24 - 12 - 94) சனிக்கிழமை காலை 10 மணிக்கு புனித மரியன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முடியப்பு பிரான்சிஸ்
(மகன்)

24/6, மத்திய கிழக்கு வீதி,
றெக்கிளமேசன் குருநகர்,
யாழ்ப்பாணம். (34323)

சின்னப்பா கதிர்காமநாதன்
(தருமபுரம் நாதன்)

நவாலியைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா - பொன்மணி தம்பதிகளின் அன்பு புதல்வர் கதிர்காமநாதன் (தருமபுரம் நாதன்) 21- 12- 94 இல் காலமானார்.

அன்னார் இராசேந்திரம்- செல்லம்மாவின் அன்பு மருமகனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், தினேஷ்குமார், நித்திலா, மிதிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜலிங்கம், நாகேந்திரராணி, புஸ்பராணி, விமலராணி, யோகேந்திரராணி, ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோகேந்திரராசா, ஜெயராசா, சிறிராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21- 12- 94 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்,
மனைவி, பிள்ளைகள்

(34321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் புதிய சம்பளத் திட்டத்தை அமுல் செய்வதில் அரசுக்கு நெருக்கடி

கொழும்பு, டிச. 23

ஆசிரியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அமுல் நடத்துவது தொடர்பாக அரசு நெருக்கடியை எதிர்நோக்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய சம்பளத்திட்டத்தை அமுல் நடத்துவது, இப்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதிலேயே தங்கியிருப்பதாக 'ஹிரு' சிங்கள வார இதழ் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டிருக்கிறது.

அதிகரித்த சம்பளத்தை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்குவதில் உள்ள சிரமம், அப்படி இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் பட்சத்தில் ஏனைய தொழிற்சங்கங்களும் சம்பள அதிகரிப்பைக் கோரலாம் என்ற அச்சம் ஆகியன காரணமாகவே அமைச்சரவை, ஆசிரியர் சம்பளத்திட்டத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தற்போது நாட்டில் வேலை நிறுத்த அச்சுறுத்தல் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த நேரத்தில் ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப்படுத்தும் முயற்சி பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று மூத்த அமைச்சர் ஒருவர் சுட்டிக்காட்டியதை அடுத்தே, புதிய ஆசிரியர் சம்பளத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்காமல் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ஏ-10)

பாப்பரசர் நூல் விவகாரம்:

பௌத்த மதகுருமாரிடம் மேற்றிராணியார் கவலை

கொழும்பு, டிச. 23

பாப்பரசர் எழுதிய நூலில் பௌத்த மதம் சம்பந்தமாக எழுதிய விடயங்கள் பௌத்த மக்களையும், பௌத்த குருமாரையும் புண்படுத்தும் வகையில் அமையுமானால், அதற்காக தமது கவலையைத் தெரிவிக்க விரும்புவதாக கொழும்பு அதிமேற்றிராணியார் அதி. வண. நிக்கலஸ் பெர்னாண்டோ ஆண்டகை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பாப்பரசர் தெரிவித்த கருத்துக்களுக்கு தெற்கில் பௌத்த குருமாரின் எதிர்ப்பு எழுந்துள்ளது—

பாப்பரசர் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் தாங்கள் பங்குபற்றப் போவதில்லை என்று பௌத்த பீடாதிபதிகள் தெரிவித்துள்ளதும் — தெரிந்தவையே. (ஒ-3)

20 திருட்டுச் சைக்கிள்கள் காவல்துறையால் மீட்பு!

பொதுமக்களிடம் இருந்து திருடப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட சைக்கிள்களை சாவகச்சேரி காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

கடந்த வாரம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் விடப்பட்டிருந்த புதிய சைக்கிள் ஒன்றைத் திருடிச்செல்ல முயன்றதாக பொதுமக்களால் பிடிக்கப்பட்டு காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டார்.

இவரை விசாரணை செய்த காவல்துறையினர் வடமராட்சிப்பகுதியில் திருட்டுப்போனதாக கருதப்படும் பல சைக்கிள்களை மீட்டெடுத்துள்ளனர்.

விசாரணை தொடர்ந்து நடத்தப்படுவதால் மேலும் பல சைக்கிள்கள் மீட்கப்படலாம் என்று காவல் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ-117)

புலிகளின் குரல் வானொலியில்

23 — 12 — 1994
வெள்ளி இரவு

★ 8-01 — மேஜர் முரளி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி—நாமகள் எழுதிய ''இறப்பினுள்ளுயிர்ப்பவன்''
★ 8-25—கணப்பொழுது—சி கண்ணம்மா எழுதிய ''கப்டன் வாணன்''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''சனநாயகம் என்னும் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை''
★ 8-50 —வாத்திய கானங்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

24 — 12 — 1994
சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

பெந்தகொஸ்தே சர்வதேச மாநாடு

இலங்கை பெந்தகொஸ்தே சபையின் வருடாந்த சர்வதேச கன்வென்ஷனும் சுவிஷேச ஆராதனைகளும் இம்மாதம் 27ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை கொழும்பில் மட்டக்குளி ரொட்ரிக்கோ பிளேசிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆராதனைகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணச் சபையைச் சேர்ந்த நூற்றுக்கு அதிகமானோர் இங்கிருந்து கொழும்பு சென்றுள்ளனர். (ஐ-20)

யாழ். நகரப் பகுதியில் விசேட சுத்திகரிப்பு பணி

அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் அடுத்த வாரத்தில் இருந்து யாழ் நகர பஜார் பகுதியை சுத்திகரிப்பு செய்யவுள்ளனர்.

''பஜார்'' பகுதியில் கழிவு நீர் ஓடும் வடிகால் மற்றும் பொது இடங்கள் அனைத்தும் சுத்திகரிப்பு பணி மூலம் துப்புரவு செய்யப்படும்.

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியின் விசேட சுத்திகரிப்பு பிரிவினர் இந்த சுத்திகரிப்பு வேலையை மேற்கொள்ளவுள்ளனர் என மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-17)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி

போலி முகவரின் குடும்பம் கும்பல் ஒன்றினால் கடத்தல்

கொழும்பு, டிச. 23

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட போலி முகவர் ஒருவரின் வீட்டுக்குள்புகுந்த கோஷ்டி ஒன்று அந்த முகவரின் மனைவி, குழந்தை மற்றும் சகோதரி ஆகியோரை கடத்திச் சென்றது.

இச்சம்பவம் கற்பிட்டிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் மூவரும் பின்னர் சிலாபத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் இருந்து விசேட பொலீஸ் குழுவினரால் மீட்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட போலிமுகவரிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகப் பணம் கொடுத்து ஏமாறியவர்களினாலேயே அவர்கள் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முகவரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்ற மேற்படி குழுவினர் முகவர் தலைமறைவாகி விட்டது கண்டு ஆத்திரம் அடைந்தனர் என்றும், பின்னர் வீட்டில் இருந்தவர்களை அவர்கள் கடத்திச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

அனைத்து உயிர்களிடமும் அன்பை கடைப்பிடிப்பவனே சைவசமயத்தவன்

'இந்து சாதனம்' வெளியீட்டு விழாவில் உரை

அன்புநெறியைப் பயில வழிகாட்டுவது சைவமதம். அனைத்து உயிர்களிடத்தும் அன்பைக் கடைப்பிடிப்பவனே சைவ சமயத்தவன்.

இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற ''இந்து சாதனம்'' பத்திரிகை வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் இவ்வாறு கூறினார்.

சைவ பரிபாலனசபைத் தலைவரும் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபருமான திரு. இ. மகேந்திரன் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

திருமதி நாச்சியார் மேலும் பேசும் போது—

''இந்து சாதனம்'' எமது மதத்தின் கோட்பாடுகளைத் தாங்கி புதிய நடையுடன் உலக மானிடம் தழுவியதாக வெளிவர வேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் உரை நிகழ்த்தியபோது கூறியதாவது:

நம்மிடையே உள்ள ஒற்றுமையீனம் காரணமாக பல ஆலயங்களில் சர்ச்சைகளும் அதனால் நீதிமன்றம் செல்ல ஆலயங்கள் குறித்த விவரக் குறிப்புக்களைத் தேடியலைவதும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. இந்நிலை தொடர்வதிலும் பார்க்க சர்ச்சரவுள்ள ஆலயங்கள் பூட்டப்படலாம்.

சைவ மக்களின் குரலாக இந்துசாதனம் செயற்படவேண்டும். சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய தேவை இந்துக்களுக்கு இப்போது உண்டு—என்றார்.

திரு. மகேந்திரன் தமது தலைமையுரையில் கூறியதாவது;—

எமது மதத்தைச் சேர்ந்த பலர் பல்வேறு காரணங்களுக்காக மதம் மாறுகிறார்கள். ஆறுமுக நாவலர் காலத்திலும் கூட மதமாற்றம் நிகழ்ந்தது. நாவலர் அதற்கெதிராக போராடினார். இன்று இது போன்றவை நிகழாது பாதுகாக்க வேண்டியது சைவர்களின் கடமை. கோயில்களில் இடம் பெறும் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து ஏழைகளின் கல்விக்காக அவற்றைச் செலவிட வேண்டும்— என்றார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சிவ. மகாலிங்கம், திரு. கே. கணேசலிங்கம், சைவ பரிபலனசபைச் செயலாளர் திரு.எஸ். சத்தியமூர்த்தி,திரு. என். சண்முகலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் உதவி அதிபர் திரு. நா. சோமசுந்தரத்திடம் இருந்து யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு.அ. பஞ்சலிங்கம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (க-111)

யாழ். செயலகத்தால் தயாரிக்கப்பட்ட

அவசர புனரமைப்பு திட்டம் கிராம சேவையாளரிடம்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ். செயலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள அவசரகால புனரமைப்புத் திட்டத்தில் தமது பாதிப்புக்களும் இடம் பெற்றனவா என்பதை கிராம சேவையாளர்களிடம் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

அவசரகால புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பாக புனரமைப்புத் திட்டம் ஒன்றை யாழ். செயலகம் தயாரித்து கிராம சேவையாளர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும்—

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், கால்நடைச் சொந்தக்காரர்கள், விவசாயிகள், தனியார் வியாபாரிகள், போக்குவரத்து சேவைச் சொந்தக்காரர்கள், தொழில் நிலைய உரிமையாளர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் இத்திட்டத்தில் உள்ளனவா என்பதை கிராம சேவையாளர்களிடம் சென்று உறுதிப்படுத்துமாறும்— அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியின்

ஆய்வுகூடம் இயங்காததால் நோயாளர்கள் சிரமம்

தென்மராட்சி, டிச. 23

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஆய்வுகூடம் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பரிசோதனையை மேற்கொள்வதற்காக யாழ். நகருக்குசெல்ல வேண்டியுள்ளது.

இவ் வைத்தியசாலை ஆய்வு கூட உத்தியோகத்தர் தொடர்ந்து கடமைக்கு வராததால் நோயாளர்கள் தினமும் காலை வேளைகளில் அவரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த பின்னர் யாழ். செல்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் சகல கிளினிக்குகளும் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

வான் கடத்தல் சம்பவத்தில்

முன்னாள் படையினர் மூவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு, டிச. 23

பம்பலப்பிட்டியில் வைத்து வான் ஒன்றைக் கடத்திய சம்பவம் தொடர்பாக முன்னாள் படையினர் உட்பட 5 பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரில் விமானப்படையின் முன்னாள் அதிகாரி, முன்னாள் ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள், இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஆகியோரும் அடங்குவர்.

இவர்கள் கைத்துப்பாக்கி ஒன்றைக் காட்டியே வானை கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

வங்கி மேலாளர் பின் வண்டி ஓட்டியானார்

நடைமுறை வேதாந்தம் இது

சுவாமி விவேகானந்தர் அப்போது பாரிஸில் தங்கியிருந்தார்.

அங்கு அவரது நண்பர்கள் சுவாமிஜியை அருங்காட்சியகம், மாதாகோயில்கள் என்று பல இடங்களுக்கும் டிராம் அல்லது பேருந்து போன்றவற்றில் அழைத்துச் சென்று காட்டினார்கள்.

சுவாமிஜிக்கு ஏற்கனவே அறிமுகமாகியிருந்த புதிய நண்பர்களில் கௌன்டஸ் ஆப் செய்த்நெஸ் (Countess of Caithness) என்ற அம்மையாரும் ஒருவர்.

அந்த அம்மையாருக்கு சுமார் அறுபத்தைந்து வயதிருக்கும். அவர் ஐரோப்பா முழுவதும் டச்சஸ் டி போமர் (Duchesse de Pomar) என்ற பெயரில் பிரபலமானவர்.

அந்த அம்மையார் ஆன்மீகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மீகத்தை வளர்க்கும் பொருட்டு தன்னுடைய திறமை, நேரம், செல்வம் ஆகியவற்றை அவர் தாராளமாகச் செலவழித்து வந்தார்.

ஒருமுறை சுவாமிஜி, இந்த அம்மையாருடன் ஒரு கோச்சு வண்டியில் பாரிஸ் நகர வீதியில் சென்று கொண்டிருந்தார்.

வண்டி நகர்ப்புறத்தைக் கடந்து ஒரு கிராமத்து வழியாகச் சென்று கொண்டிருந்தது.

வழியில் ஒரு வேலைக்காரப் பெண்மணியுடன் ஒரு சிறுவனும், சிறுமியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களை பார்த்ததும் வண்டிக்காரன் சட்டென்று வண்டியைச் சாலையோரமாக நிறுத்தினான். கோச்சிலிருந்து இறங்கி அவன் அந்த இரண்டு குழந்தைகளின் அருகில் சென்றான்; அவர்கள் தலையை அன்போடு வருடிக் கொடுத்து சிறிது நேரம் அவர்களைக் கொஞ்சிவிட்டுத் திரும்பினான்.

பிறகு கோச்சில் அவன் தன் இருப்பிடத்தில் அமர்ந்து கடிவாளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு குதிரைகளை ஓட்ட ஆரம்பித்தான்.

இந்தக்காட்சியைப் பார்த்த அம்மையார் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

அதனால் அவர் வண்டிக்காரனிடம், 'ஏனப்பா நீ அப்படிச் செய்தாய்? அந்தக் குழந்தைகளைப் பார்த்தால் பணக்காரர் வீட்டுக் குழந்தைகளைப் போல் காணப்படுகிறார்களே!' என்று வினாவினார்.

அதற்கு வண்டியோட்டி தன் இருக்கையில் இருந்தபடியே அம்மையாரைத் திரும்பிப் பார்த்து, ''அம்மா! நான் பாரிஸ் நகரிலுள்ள ஒரு வங்கியில் மேலாளராக இருந்தேன். சமீபத்தில் அந்த வங்கி திவாலாகிவிட்டது. என்னிடம் இருந்த சிறு சேமிப்பில் இந்த வண்டியையும், குதிரைகளையும் வாங்கி வண்டியோட்டும் இந்தப் புதிய தொழிலுக்கு வந்து விட்டேன்.

''இப்போது ஒரு வாடகை வீட்டில் என்மனைவியோடும், இரண்டு குழந்தைகளோடும் வாழ்ந்து வருகிறேன் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள ஒரு வேலைக்காரியையும் அமர்த்தியிருக்கிறேன். நீங்கள் பார்த்த அந்தக் குழந்தைகள் இருவரும் என்னுடைய குழந்தைகள்'' என்று பதில் கூறினான்.

வாழ்க்கையில் உயர்மட்டத்திலிருந்து சரிந்து கீழ்மட்டத்திற்கு தாழ்ந்தபோதும், அதனால் பாதிக்கப்படாத வண்டியோட்டியின் உயர்ந்த மனநிலையும் மன உறுதியும் சுவாமி விவேகானந்தரைப் பெரிதும் கவர்ந்தது.

சுவாமிஜி மேற்கூறிய இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, '''நடைமுறை வேதாந்தம்' என்பதற்கு இந்த வண்டியோட்டியின் வாழ்க்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டு பகவத்கீதையின் கருத்தாகிய 'வருவதை ஏற்றுக்கொள்ளும்' மனப்பக்குவம் அவனுக்குக் கடவுள் அருளால் தான் ஏற்பட்டிருந்தது அத்தகைய உயர்ந்த உள்ளத்தை அவனுக்குக் கொடுத்த கடவுளுக்கு நாம் மனதார நன்றி சொல்லத்தான் வேண்டும். உண்மையிலேயே அவன் ஒரு வேதாந்தி தான்!'' என்று பல முறை சொல்லியிருக்கிறார்.

நன்றி:

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

(ஞானக்கதிர்)

சாதாரண சிந்தனைகள் - அரசியல் கட்டுக்கோப்பு இவற்றுக்கு அப்பாற்பட்டதே சமாதானம்

யுத்தத்தினால் வடபகுதி 100 வருடங்கள் பின்தள்ளப்பட்டு விட்டது

தென்னிலங்கை கத்தோலிக்க குரு கவலை

யாழ்ப்பாணம், டிச. 23

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான சில எண்ண அலைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உள்ளத்தில் இருப்பது போல் தெரிகிறது. விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் உள்ளத்திலும் சமாதான தீர்வுக்கான எண்ண அலைகள் குடிகொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இந்த எண்ண அலைகள் ஒருமைப்பாட்டை அடையும் பட்சத்தில் சமாதானம் பிறக்க வாய்ப்புண்டு. இதுஎமது சாதாரண சிந்தனைகளுக்கும் அரசியல் கட்டுக்கோப்புகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகவே எனக்குத் தோன்றுகிறது.

அம்பிட்டிய தேரிய மடத்தின் விரிவுரையாளரான அருட்திரு. டட்லிபெரேரா பாதுகாவலன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுகின்ற எந்த ஒரு சாராரும் நம்மை ஒரு பலமான நிலையில் வைத்து கொண்டு பேசவே முன்வருவார்கள்.

எந்தச் சாராரும் தமது பலவீனத்தின் நிமித்தம் பேச்சுவார்த்தைக்கு முன்வரமாட்டார்கள்.

அந்த வகையில் அரசதரப்பினரும் விடுதலைப் புலிகளும் நம்மை ஒரு பலமான,ஸ்திரமான, நிலையில் வைத்துள்ளனர்.

முக்கியமாக விடுதலைப் புலிகள் தாங்கள் எவராலும் வெற்றி கொள்ளப்படாத பலமான நிலையில் உள்ளார்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி உள்ளனர்.

சமாதானப்பேச்சு வார்த்தைக்கும் அமைதித் தீர்வுக்கும் இந்த நிலை மிகவும் சாத்தியமானது என்றே நான் கருதுகிறேன் என்றும் அருட்திரு. டட்லிபெரேரா கூறினார்.

அருட்திரு. டட்லிபெரேரா ஐந்தாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஆனால் அவர் கடைசியாக யாழ்ப்பாணம் வந்தது 15வருடங்களுக்கு முன்பே.

அருட்திரு. டட்லிபெரேராவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: இந்தத் தடவை நீங்கள் இங்கு வந்து இறங்கியவுடன் உங்கள் மனதில் ஏற்பட்ட உணர்வுகளைப் பற்றி கூற முடியுமா?

பதில்: இதற்கு முன்னர் நான் இங்கு வந்தபொழுது மிகவும் மகிழ்ச்சியான பயணங்களைத் தான் அனுபவித்தேன் ஆனால் இம்முறை முற்றிலும் முரண்பாடான ஒரு பயணத்தினூடாக இங்கு வந்து சேரக்கூடியதாக இருந்தது.

நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான பயணக் கஷ்டங்களை அனுபவித்தேன். தமிழர்கள் அனைவரும் இக்கஷ்டங்களை அனுபவித்ததைப் பார்த்தபோது தமிழ் மக்களின் கஷ்டங்களை பார்க்க முடிந்தது என்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய துன்பங்களை நானும் அனுபவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்பதையிட்டு ஒரு குருஎன்றவகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கேள்வி: வடக்கு [illegible] நிலைமை பற்றி நீங்கள் கொழும்பிலே [illegible]

தற்கும் நேரிலே பார்ப்பதற்கும் இடையே ஏதாவது வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்கிறீர்களா?

பதில்: நிச்சயமாக பாரிய வேறுபாடுகள் இருப்பதைத் தான் நான் அவதானிக்கிறேன். முக்கியமாக யாழ். நகருக்கும் அதைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற பாரிய அழிவைப் பற்றி நான் கொழும்பில் சற்றுமே கேள்விப்படவில்லை.

அழிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டு உருக்குலைந்து போயுள்ள கட்டடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், மக்களின் வீடுகள்... இவையெல்லாம் நம்பமுடியாத காட்சிகளாகவேயுள்ளன.

தென்பகுதி சமூகத்தொடர்புச்சாதனங்கள் எதுவும் இவ்வழிவுகளைப்பற்றி வெளிப்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் என்று சில [illegible] பிரச்சியதைத்தான் பார்த்தி[illegible]

இங்கு வந்து இந்த அழிவுகளைப் பார்த்த பின்னர் தான் இங்கு நடைபெறுகின்ற போர் எவ்வளவு கொடூரமானது என்பதை என்னால் உணரக்கூடியதாகவுள்ளது.

கேள்வி: வடபகுதி வாழ் மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இங்கு வாழுகின்ற மக்களின் வாழ்க்கை நிலை, போக்குவரத்து வசதியின்மை, மின்சாரமின்மை, தொடர்புசாதனங்களின்மை, மருத்துவ வசதியின்மை போன்ற காரணிகளால் 100 வருடங்களுக்கப்பால் பின்தள்ளப்பட்ட ஒரு நிலையையே நான் காணுகின்றேன்.

இந்த பின்னடைவான வாழ்க்கை முறையை மக்கள் தவிர்க்கமுடியாத தொன்றாக ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது தங்கள் விடுதலை வழியை மனதிற்கொண்டு திருப்தியோடு ஏற்றுக்கொண்டுவாழ்கிறார்களா என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது.

நன்றி:

— பாதுகாவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

யாழ். நகரில் சுபாஸ் ஹோட்டலுக்குப் பக்கத்தில் விக்ரோறியா வீதி முகப்பில் காணி விற்பனைக்குண்டு. இல. 55, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (34311)

விற்பனைக்கு

றேடியோ, சுவர் – கைக் கடிகாரங்கள், சில்வர் பிளாஸ்றிக் பொருள்கள், பாடசாலை — தையல் உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகு மாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9837)

1995ஆம் ஆண்டுக்குரிய நாட்குறிப்பேடுகள் (டயறி) மலிவுவிலையில் விற்பனைக் குண்டு. தொகைக்கு எடுப்பின் கழிவு வழங்கப்படும். ரஞ்சித் இல. 16 (44), மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (34306)

நாவற்குழிக் கோயிற்பற்று கைதடி இறை "இலங்கையன் பிட்டியும்" "நடைக்குளிக் காடும்" நெற்பரப்பு 16, கைதடி தபால்கந்தோருக்கு கிட்டுதலாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விரும்புவோர் சி. ஜெயராசா, இல. 94, ஐயனார் கோயில்வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் சந்திக்கவும். (34278)

நாற்பது நாள் பூச்சி நீக்கிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 58, வேம்படி றோட், யாழ்ப்பாணம். (8095)

மகாலக்ஷ்மி திருக்குறள் நாட் கலண்டர்கள் விற்பனையாகின்றன. விலை 65/-. மாதப்படக் கலண்டர்கள் விலை 14/-. வியாபாரிகள் தங்கள் விலாசமிட்டுப் பதிப்பித்து கொள்ளலாம். விசேஷ கழிவுண்டு. மகாலக்ஷ்மி அச்சகம், 127, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8096)

கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34300)

நத்தார் வாழ்த்துமடல்கள்

புத்தம் புதிய நத்தார், புதுவருட வாழ்த்துமடல்கள், மியூசிக்கல் வாழ்த்துமடல்கள் விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு. ஆனந்தஸ், புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34279)

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விற்பனை யோகிக்கப்படுகின்றன. நோட்டுப் புத்தகங்கள், கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

வெங்காயப் பயிருக்கு

வெங்காயப் பயிரில் பாவித்து நற்பயன் பெற்றது நீமியா உரம். விளைச்சலைப்பெருக்குவதுடன் வெங்காயத்தாளினுள் தங்கி நாச வேலையில் ஈடுபடும் புழுப்பகைவன் பயிரை அண்டவிடாது பயிரைக்காக்கிறது. பாவித்துப் பயன்கண்டோர் மீண்டும் நாடுகிறார்கள். 'மில்க்வைற்'. (சி-10081)

கலண்டர்கள்

பொக்கற் கலண்டர்கள் சகல விதமான தினத்தாள் கலண்டர்கள் அன்பளிப்பு அடிக்கும் கலண்டர்கள் பெரிய, சிறிய சிலிப் தனியாக மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். காந்தி அறிவகம், இல. 330, காங்சேசன் துறைசாலை, யாழ்ப்பாணம். (34304)

புத்தகங்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் Bright இன் புத்தகங்கள் கணிதம் ரூபா 60/- தமிழ் 50/- 20 மாதிரி வினாத்தாள்கள் 80/- இலகு முன்னோடிப் பயிற்சிகள் 80/. பூபாலசிங்கம் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34302)

யாருடையது?

இணுவில் வைத்திய சாலைக்கு முன்னால் கே.கே.எஸ். றோட்டில் 20-12-94 மாலை 6-30 மணியளவில் ஒரு புதுக்குடை கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரத்தைக் கொண்டு பெற்றுக் கொள்ளவும். Pharmacist Mcleod Hospital Inuvil. (7841)

ரி. வி. டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள், ரி.வி.டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ லேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம்சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்; கண்டி வீதி, சாவகச்சேரி, மாவிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9011)

வவுனியாவில் நான்கு தேசிய பாடசாலைகள்

வவுனியா மாவட்டத்தில் நான்கு பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கப்பட இருக்கின்றன.

அந்தப் பாடசாலைகளின் கல்வி மற்றும் கட்டட வசதிகள் குறித்த விவரங்களை கல்வி அமைச்சர் கோரியுள்ளார். (ஒ-3)

புனரமைப்பு

மாலிப்பாய் பகுதியில் அமைந்துள்ள மருதடிக்குளம் தேசநிர்மாணிகளால் திருத்தப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுமதல சேவைத்திணைக்களத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இக்குளம் ஆழமாக்கப்பட்டும், அணைக்கட்டுகள் திருத்தப்பட்டும் உள்ளன.

KEEN கல்வி நிலையம்
திருநெல்வேலி.

A/L 95 DAY CLASS
(94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு உரியது)

பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. சௌந்தி
வர்த்தகம் — திரு. வரதன்
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
தமிழ், இ. நாகரிகம் — திரு. காரை S. செங்கா
புவியியல் — திரு. சேரன்
அரசியல் — திரு. கிருஷ்ணகுமார்

வகுப்புகள் நடைபெறுகின்றன.
(சி/10074)

தமிழ்மக்களின் எதிர்காலம் பற்றி தீர்க்கதரிசனமாக உணர்ந்தவர்

சேர். பொன். இராமநாதன் குறித்து துணைவேந்தர்

யாழ்ப்பாணம், டிச. 23

சேர் பொன். இராமநாதன் சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கப் போவதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்து செயற்பட்ட முதுபெரும் தமிழ்த் தலைவர் ஆவார்.

சேர் பொன். இராமநாதன் குருபூசைத் தினத்தை யொட்டி யாழ். பல்கலைக் கழக இந்து மன்றம் ஒழுங்கு செய்த விழாவில் பல்கலைக் கழக சபா மண்டபத்தில் அப்பெரியாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்தபின் ஆற்றிய சிறப்புரையில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:

சேர். பொன். இராமநாதன் ஆரம்பத்திலே அகில இலங்கை ரீதியில் ஒரு தேசிய வாதியாகச் செயற்பட்டார். ஆனால் தமது வாழ்வின் பிற்பகுதியில் பெரும்பான்மை மக்களின் நடவடிக்கைகளால் அவர் விரக்தி அடைந்தார் என்றார்.

மேலும் அவர் தமது உரையில், 'ஆறுமுகநாவலரின் பணிகளை முன்னெடுத்துச் சென்ற பெருமையும் அவருக்குண்டு. யாவும் பரமேஸ்வரன் சொத்து என்ற கோட்பாட்டில் அவர் பணியாற்றினார். அவரது பணிகளும் செயற்பாடுகளும் தமிழ்ச் சமுதாயம் மேன்மை பெற வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டவை. அப்பெரியாரின் பணிகளை ஆழமாக ஆராய்ந்து முன்னெடுத்துச் செல்வதே அப்பெரியாருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்' எனக் குறிப்பிட்டார்.

இக்குருபூசைத் தினத்தை யொட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் திரு. க. ஈஸ்வரன் தமது தலைமையுரையில், 'எமது மக்களின் சமயம், மொழி, கல்வி, சமூகம் ஆகியவற்றின் மேம்பாடு பற்றி இந்நூற்றாண்டில் மிகுந்த சிரத்தையுடன் சிந்தித்துப் பணியாற்றிய பெரியார்கள் வரிசையில் சேர். பொன். இராமநாதனுக்குக் குறிப்பிடத்தக்க இடமுண்டு. அவரது சிறந்த பணிகளால் எமது பண்பாட்டு விழுமியங்கள் உலகளாவிய நிலையில் சிறப்படைந்தன. இக்குருபூசைத் தினத்தில் அப்பெரியாரை நினைவு கூர்வது எமது கடமையாகும் எனக் குறிப்பிட்டார்.

சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவன குருகுலச் சிறார்களின் வேதபாராயணமும் இராமநாதன் நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு. நா. வி. மு. நவரத்தினத்தின் திருமுறை பாராயணமும் குருபூசைத் தினவிழாவில் இடம் பெற்றன.

இந்நினைவு தினத்தையொட்டி மாலையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரமும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து இசைக்கலைமணி திரு. வர்ண இராமேஸ்வரனின் இசை நிகழ்ச்சியும் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடக நிகழ்ச்சியும் இடம் பெற்றன. (க)

தேவை

அலுவலக உதவியாளர்

அச்சகமொன்றுக்கு கணக்கேடுகள் பராமரிப்பு, ஒப்புநோக்குதல் முதலிய பணிகளை புரிவதற்கு தகுதி உடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ வயது: 35ற்கு மேல்
★ ஓரளவு ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

28 - 12 - 94ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 737,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (34316)

எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்)
411/1, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
By
BRITTO

ஆரம்பம்: 22 - 12 - 1994
பி. ப. 3 - 30
(வியாழன், வெள்ளிகளில் வகுப்பு நடைபெறும்)
(சி-34)

கூறுவிலை கோரல்

பின்வரும் வேலைகளுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரில் வந்து பெற்று 31 – 12 – 94ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கவும்.

1. கட்டடத்திற்கு மைபூசுதல், திருத்த வேலைகள் செய்தல்
2. காவலாளி வதிவிடம் ஒன்று பனைமரத்தால் அமைத்து, தகரத்தால் கூரை போடுதல்
3. துவிச்சக்கரவண்டி தரிப்பு நிலையம் ஒன்று அமைத்தல்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(சி-10084)

தமிழீழ காவல்துறையினருக்கு பாராட்டுகள்

26-10-94 அன்று இரவு எனது வீட்டில் இருந்த C50 கப்பர் கப் மோட்டார்சைக்கிள்(த1 0725)திருடப்பட்டதைத் தொடர்ந்து 27-10 94இல்யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவில் உள்ள காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்தேன். அச்சமயம் அவர்கள் இன்முகம் காட்டி வரவேற்று எனது முறைப்பாட்டினை ஏற்றுக் கொண்டார்கள். இது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். பின் 29-11-94இல் மேற்படி எனது மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களாகக் கழற்றப்பட்ட நிலையில் பாண்டியன் தாழ்வுப்பகுதியிலிருக்கும் மரக்கறி வியாபாரி ஒருவரின் வீட்டிலிருந்து மீட்டுத்தந்தனர். உதிரிப்பாகங்கள் அனைத்தும் குறையாத நிலையில் எனது மோட்டார் சைக்கிளை மீட்டுத்தந்த தமிழீழ காவல்துறையினரின் அயராத சேவையை மனதார பாராட்டுகிறேன் அத்துடன் இளாவி துறைமுகங்களுக்கான பொறுப்பாளர்களுக்கும் எனது மேற்படி மோட்டார் சைக்கிள் மீளக்கிடைத்துவிட்டதென்பதை அறியத்தருகின்றேன்.

சு. கனகரத்தினம்.
547, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (34313)

வித்தகத்தாள் புள்ளியிடும் பணி இன்று ஆரம்பம்

கொழும்பு, டிச. 23

இம்மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடு செய்யும் பணி இன்று ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ)

விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், டிச. 23

உரும்பிராயில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

சங்கானை வடக்கைச்சேர்ந்த நடராசா அன்னபூரணம் (வயது 51) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

மாதாந்த அறிவியலரங்கு

தென்மராட்சி, டிச. 23

தென்மராட்சி பிரதேச சபை மிருசுவில் உப அலுவலக உசன் பொது நூலக அபிவிருத்திச் சபையினர் நடத்தும் மாதாந்த அறிவியலரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் சபைத் தலைவர் மு. க. சிவானந்தம் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி திருக்கணித நிலைய உரிமையாளர் சிவஸ்ரீ கு. சிதம்பரநாதக் குருக்கள் "வானியலும் சோதிடமும்" என்னும் பொருளில் உரையாற்றுவார். (ஐ-117)

வேதமுரசு வெளியீட்டு விழா

கச்சாய், டிச. 23

"வேதமுரசு" சமய சஞ்சிகையின் இரண்டாவது இதழின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை கச்சாய் முருகமூர்த்தி கோயிலில் நடைபெறும்.

மேற்படி ஆலயத்தில் இடம் பெறும் திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து பி. ப. 2-30 மணிக்கு தென்மராட்சி திவ்விய ஜீவன் சங்கத் துணைத் தலைவர் திரு. சு. இராசரத்தினம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெறும். (அ)

ஆஸ்பத்திரிக்கு வாளிகள் அன்பளிப்பு

யாழ். போதனா வைத்திய சாலையின் நோயாளர் நலன் புரிச்சங்கம் வைத்தியசாலையின் பாவனைக்காக வாளிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

20 ஆயிரம் ரூபா பெறுமதியான 70 வாளிகளை நேற்று முன்தினம் நோயாளர் நலன் புரிச்சங்கம் வைத்தியசாலைப் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் அடங்கிய குழுவிடம் கையளித்தது. (ஐ-15)

முன்னாள் அமைச்சர் மரணம்

முன்னாள் அமெரிக்க உள்துறை அமைச்சர் டீன் றஸ்க் தமது 84ஆவது வயதில் காலமானார். 1961 — 1969 ஆண்டு காலப் பகுதியில் பதவியில் இருந்த அவர் ஜனாதிபதி கென்னடி, ஜனாதிபதி ஜோன்சன் ஆகியோரின் கீழ் பணியாற்றினார். (ஐ-3)

முந்துங்கள்!

வானவில்லின் நத்தார் புதுவருட விசேட சலுகை!!

பண்டிகைக் கால "ஒன்று கூடல்" உணவுகளில்

★ வான்கோழி
★ கோழி
★ புரியாணி
★ சூப்

மற்றும்

★ பலவித ஐஸ்கிறீம்
★ புடிங் வகைகளுடன்

உடன் பரிமாற்றக் கூடிய தயாரிப்புக்கள்
இவற்றுடன்
★ கிறிஸ்மஸ் கேக்
★ இனிப்பு - சிற்றுண்டி வகைகள்

★ வானவில் உங்களுக்காக காத்திருக்கின்றன ★

உங்கள் தேவைகளை முற்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கவனிப்பு: சலுகைக் காலம்: 20-12-1994 → 05-01-1995

தொடர்புகளுக்கு:

வானவில்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

★ தரமான தயாரிப்புகளுக்கு நாடுங்கள் வானவில் ★

(சி-10072)

ROTARY INTERNATIONAL

யாழ். றோட்டறிக் கழகம்

தொழிற் திறமை விருது வழங்கலும் சான்றிதழ் வழங்கலும்

கடந்த சனிக்கிழமை (17-12-1994) நடைபெற விருந்து ஒத்திவைக்கப்பட்ட யாழ். றோட்டறிக் கழகத்தின் தொழிற் திறமை விருது வழங்கலும், சான்றிதழ் வழங்கலும் விழா,

நாளை சனிக்கிழமை (24-12-1994)
காலை 9 மணிக்கு
யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில்
நடைபெறும்.

★ தொழில்துறை வல்லுநர்கள் நால்வரும்
★ சிறந்த சேவை சான்றிதழ் பெறும் அறுவரும்
★ இளைஞர் திறன் சான்றிதழ் பெறும் ஒருவரும்

விழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-10085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

பேச்சுவார்த்தை தாமதம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இந்த வாரத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் கைகூடவில்லை.

அரசாங்கம் தெரிவித்த மோதல் தவிர்ப்பு, போர் நிறுத்தம் சம்பந்தமான யோசனைகளை ஏற்று தமிழீழ விடுதலைப் புலிகள் பதில் அனுப்பியிருந்தபோதிலும், அரசாங்கத்தினால் பேச்சுவார்த்தைக்கான நிகழ்சியையும், தனது பிரதிநிதிகளையும் அறிவிக்க முடியாமற் போயிற்று!

பேச்சுவார்த்தையை நத்தாருக்கு முன்னர் நடத்துவது என்று அரசாங்கமே முதலில் உத்தேசித்திருந்தது. தாம் நடத்திய செய்தியாளர் மாநாடுகளிலும், கொழும்புப் பத்திரிகைகளுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கிய தகவல்களிலும் அரசு — புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நத்தாருக்கு முன்னர் நடைபெறும் என்ற நம்பிக்கையை ஊட்டியவர்கள் அரசாங்கத் தரப்பினரே.

ஆனால் தாமே உத்தேசமாக அறிவித்திருந்த 21, 22 ஆம் திகதிவரை, பேச்சுவார்த்தை குறித்து அவர்களால் உறுதியாக, திட்டவட்டமாக எதனையும் முடிவு செய்ய இயலவில்லை.

இத்தனைக்கும் விடுதலைப் புலிகள், தாம் அரசுக்கு அனுப்பிய பதில்களைத் தொடர்ந்து, அரசிடம் இருந்து பேச்சுத் திகதி, அரச பிரதிநிதிகள் விவரம், நிகழ்ச்சி நிரல் என்பனவற்றை இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்தவண்ணமே காத்திருந்தனர்.

ஆனால் அரசு, பேச்சுவார்த்தையை எப்போது நடத்துவது என்பது குறித்து புதன் கிழமை வரை முடிவு செய்ய இயலாமல் தடுமாறியது என்றே சொல்லலாம். இந்தத் தளம்பல் நிலைமையினால் தான், நத்தாருக்குப் பின்னரே பேச்சுவார்த்தை என்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா கடந்த புதனன்று அறிவித்தார்.

தானே உத்தேசித்தவாறு நத்தாருக்கு முன்னர் சமாதானப் பேச்சுக்களை அரசு நடத்த முடியாமற் போனமைக்கு, உள்ளுக்குள்ளே பல சிக்கல்கள், குழப்பங்கள், தடங்கல்கள், அழுத்தங்கள் இருந்திருக்க வேண்டும்.

பொதுவாகவே சிறு சச்சரவுகளை சமாதானம் செய்து வைக்கும் சந்தர்ப்பங்களில் கூட, மேலே சுட்டிக்காட்டப்பட்ட அசாத்தியமான நிலைப்பாடுகள் தோன்றுவதுமெய்ப்பு. அவற்றை வெளியே சொல்ல விரும்பாவிடில், நிலைமையைச் சமாளித்துக் கொண்டு அடுத்த திகதியை அரசு அறுவித்திருக்கலாம்.

ஆனால் தமது பல்லைக் குத்திப் பிறருக்குக் காட்டக் கூடாது என்பதற்காக அடுத்த பக்கத்தில் பழியைச் சுமத்த முயல்வது அடுக்காத ஒன்றாகும்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்த்துக்கொண்டு, பின்னர் அடிப்படை — அரசியல் பிரச்சினை குறித்துப் பேசுவது என்ற முந்திய ஏற்பாட்டை, தங்கள் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றவாறு மாற்றுவதற்கு தில்லுமுல்லு செய்வதாலேயே இந்தத் தடுமாற்றமும், தளம்பலும் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிலைமை இப்படி இருக்க— யாழ்ப்பாணத்தில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்களில் அரசாங்கம் தொடர்பாகவும், முதல் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொண்ட அரச தரப்புப் பிரதிநிதிகள் சார்பாகவும் வெளிவந்த கருத்துக்கள் குறித்து விடுதலைப் புலிகளிடம் விளக்கம் கேட்ட பின்னரே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை என்பதே அரசின் உண்மையான நிலைப்பாடானால் —

அது—

தவறை அல்லது இயலாமையை தமது பக்கம் வைத்துக் கொண்டு நொண்டிச் சாட்டு ஒன்றைக் கண்டுபிடிக்கும் பொருந்தாத நடைமுறையாகும். பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு இத்தகைய "சின்னத்தனங்கள்" ஒரு போதும் உதவமாட்டா!

சமஷ்டி முறைத் தீர்வு தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்கள் மாநாடு

விரைவில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, டிச. 23

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசமைப்பில் தீர்வு காணுவது தொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமஷ்டி அரசமைப்பு முறை மூலம் வடக்கு — கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு காணக்கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளதால், கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு விரைவில் நடத்தப்படவிருப்பதாக அரச அறிவிப்பாளரை மேற்கோள் காட்டி, ஞாயிறு "லங்காதீப" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இம்மாநாட்டில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அரியல் கட்சிகள், ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. உட்பட அனைத்துக் கட்சிகளையும் அழைப்பதென தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாநாடு நடைபெறும் அதே வேளையில் — ஏனைய அமைப்புகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படும் என்றும்— பொதுமக்கள் கருத்து பெறப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இறுதிச் செயற்பாடு குறித்து இன்னும் இணக்கம் காணப்படவில்லை என்றும் லங்கா தீப வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசமைப்பில் தீர்வினைக் காண்பது தொடர்பாக வழி வகைகளைக் கண்டறியும் நடவடிக்கைகளில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், டாக்டர் நீலன் திருச்செல்வம், டாக்டர் ஜயதேவ உயங்கொட ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ஐ-10)

கொழும்பு - வவுனியா

இரவுநேர தபால் ரயிலில் முடிச்சு மாறிகள் கைவரிசை

கொழும்பு, டிச.23

கொழும்பு- வவுனியா இரவு தபால் ரயிலில் முடிச்சு மாறிகளின் கைவரிசை தொடர்ந்து அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி இரவு ரயில், மாஹோ ரயில் நிலையத்தில் தரித்து நின்ற சமயம் பயணி ஒருவரின் "பாக்" ஒன்று மாயமாய் மறைந்துள்ளது.

அதற்குள் 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாக பறிகொடுத்த பயணி வேதனையுடன் தெரிவித்தார்.

முடிச்சு மாறிகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும் என பொலீஸாரும் ரயில்வே அதிகாரிகளும் பயணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-17)

பிரபல இலங்கைவிஞ்ஞானி அமெரிக்காவில் மரணம்

கொழும்பு, டிச. 23

புகழ் பெற்ற இலங்கை விஞ்ஞானி பேராசிரியர் சிறில் பொன்னம்பெருமா அமெரிக்காவில் நேற்று முன் தினம் மரணமானார்.

71 வயதான அவர் நேற்று முன்தினம் மாரடைப்புக்குள்ளாகி மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலியில் பிறந்த அவர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானி அல்வினிடம் விண் வெளி விஞ்ஞானம் பற்றி பட்டப்பின்படிப்பை மேற்கொண்டார்.

உயிரின ரசாயன மூலம் குறித்து ஆய்வுகளைச் செய்த தனால் பேராசிரியர் பொன்னம்பெருமா அமெரிக்க விண் வெளிஸ்தாபனத்தின் நாஸா ஆய்வு கூடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். (ஐ-எ)

ஆளுநரின் அறிக்கையின் படி

தமிழக அரசை கலைக்க வாழப்பாடி கோரிக்கை!

சென்னை, டிச. 23

தமிழக ஆளுநர் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கும் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசை கலைக்கும் நடவடிக்கையை பிரதமர் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்

தமிழக அரசை கலைக்க வேண்டும் என்று தமது அறிக்கையில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாக ஆளுநரே வெளிப்படையாக கூறியுள்ளார் என்றும் வாழப்பாடி தெரிவித்தார்.

மாநிலத்தில் ஊழல் அளவு கடந்து போயுள்ளதாகவும்— விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து விட்டதாகவும், சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும்— தெரிவித்த அவர் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க இவையே போதுமான காரணங்களாகும் என்றார்.

மத்திய அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தமிழகத்தில் தமது கட்சி கிளர்ச்சிகளில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

நாவற்குழியில் பாலர் தின விழா

தென்மராட்சி, டிச. 23

வடக்கு- கிழக்கு புனர்வழ்வு அபிவிருத்திநிறுவனத்தினரால் தென்மராட்சிப் பிரிவில் நடத்தப்படும் பாலர் பாடசாலை சிறார்களின் பாலர் தினவிழா கடந்த திங்கட்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ஐ-117)

ரோட்டறி விருதுகள் நாளை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் நடத்தும் தொழிற் திறமை விருது — சேவைச் சான்றிதழ்கள் வழங்கும் விழா நாளை சனிக்கிழமை நடைபெற உள்ளது.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த விழாவில் — தொழிற்திறமை விருது பெறும் திருவாளர்கள் முத்துக்குமாரு கண்ணன், ஆசைப்பிள்ளை ஞானசேகரம், முத்துக்கிருஷ்ணர் அற்புததேவன், செல்வி அன்னலெட்சுமி சின்னத்தம்பி ஆகியோர் விருதுகளும் —

யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர்களான திருவாளர்கள் ரி. நிவலிங்கம், எம். நவரத்னராஜா, திருமதிகள் எல்.எம். ஜே. ரஞ்சிதம், ஏ. கணபதி, செல்விகள் என். தயாநிதி, என். மஞ்சுளாதேவி ஆகியோர் சிறந்த சேவைக்கான சான்றிதழ்களும் —

உரும்பிராயைச் சேர்ந்த செல்வி தர்சினி சுப்பிரமணியம் இளைஞர் திறன் சான்றிதழும் — வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

இந்த விழா கடந்த சனிக்கிழமை நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (அ)

அரசாங்க நிறுவனங்களில் விரைவில் ஊழியர்குழுக்கள்

ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, டிச. 23

அமைச்சுகளிலும் அரச நிறுவனங்களிலும் ஊழியர் குழுக்களை அமைக்கும் படியும் அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு முன் அதனைப் பூர்த்தி செய்யும்படியும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணித்திருக்கிறார்.

ஊழியர் பிரச்சினைகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விவகாரங்களுக்கு துரித தீர்வு காணும் பொருட்டு இக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதனைத் தவிர ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட அமைச்சுக்கும் இடையில் நல்லுறவை வளர்ப்பதும் இதன் நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுக்கள் அமைச்சுகள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களில் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டில்

ராவும், ஜனாதிபதியும் கலந்து கொள்வது உறுதி!

சென்னை, டிச. 23

தஞ்சாவூரில் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதமர் நரசிம்மராவும், ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவும் பங்குபற்றுவது உறுதியாகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மாநில அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் இத்தகவலை வெளியிட்டார்.

மாநாட்டின் ஆரம்பநாள் நிகழ்ச்சியில் ஜனாதிபதியும், இறுதிநாள் நிகழ்ச்சியில் பிரதமர் நரசிம்மராவும் பங்குபற்றுவர் என்று அவர் கூறினார்.

மாநில ஆளுநர் சென்னா ரெட்டியை மாநாட்டுக்கு அழைப்பது பற்றி மாநில அரசு இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-எ)

உதவிப் பணம்

யாழ்ப்பாணம், டிச. 23

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுவர்களுக்கான கடந்த ஒன்பது மாத நிலுவை டிசம்பர் மாத உதவிப்பணத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-30)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் 95 ஜூன் மாதமே நடத்தப்படும்

முன்னைய முடிவை அரசு கைவிட்டது

கொழும்பு, டிச. 23

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனை பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அடுத்த மாதம் தேர்தல் நடத்தும் தமது திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஜூன் மாதத்திலேயே இவற்றுக்கு தேர்தலை நடத்துவது என்று அரசாங்கம் தற்போது தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு 1991 மே மாதம் தேர்தல்கள் நடந்தன. இவற்றின் நான்கு வருடகால காலம் எதிர்வரும் ஜூன் மாதத்துடன் முடிவடைகின்றது.

அதற்கு முன்பு இம்மாதக் கடைசியில் இச்சபைகளைக் கலைத்து விட்டு புதிய தேர்தலை எதிர்வரும் ஜனவரியில் நடத்துவதென அரசு முன்னர் தீர்மானித்திருந்தது.

எதிர்வரும் பெப்ரவரியில் புதிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, வாழ்க்கைக் செலவு உயர்வு கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே இத் தேர்தல்களை நடத்துவது உகந்ததாக இருக்கும் என்று அரச உயர் வட்டாரங்கள் தற்போது கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும்?

கொழும்பு, டிச. 23

அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தனித்து போட்டியிடுவது என்ற யோசனையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரிசீலனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலை முஸ்லிம் காங்கிரஸின் பேச்சாளர் எம். எம். அபுல்கலாம் தெரிவித்தார். (ஐ-எ)

மலையகத்தில் அடக்குமுறை அதிகரிப்பு இளைஞர்கள் தொடர்ந்து கைது!!

தொழிலாளர் தேசிய சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 23

மலையகப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் தேசிய சங்க தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ். டி ஜயாத்துரை பத்திரிகை அறிக்கை ஒன்றில் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

மலையகப் பகுதிகளில் இன்று சிறிது சிறிதாக அடக்கு முறையும் கண்காணிப்பும் அதிகரித்து வருகிறது.

தேர்தல் சமயத்தில் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது மீண்டும் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள தமிழ் மக்கள் மீதுள்ள சந்தேகம் மேலும் அதிகரித்து வருவதையே இது எடுத்துக் காட்டுகிறது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு பரிகாரம்காண மக்மனிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி சமத்துவ மிக்க சமுதாயத்தை நிறுவ இருசாராரும் உடனடியாக பேச்சுவார்த்தையை நடத்தி அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவும் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனும் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (ஐ-எ)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு வழங்கிய நியமனங்கள் ரத்தாகும்!

கல்வி உயர்கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, டிச. 23

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சினால் அண்மைக் காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக சிற்றாழியர், காவலாளி மற்றும் நூலக உதவியாளர்களுக்கான நியமனங்களை உடனடியாக ரத்துச் செய்யும் படி கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன உத்தரவிட்டுள்ளார்.

இந்த நியமனங்கள், உரிய முறைப்படி பகிரங்க விளம்பரத்தின் மூலம் வழங்கப்படவில்லை என்ற முறைப்பாட்டை அடுத்தே, அமைச்சர் முன் கண்டவாறு உத்தரவு பிறப்பித்தார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. யா. எல். எம். முகைதீன் இம் முறைப்பாட்டைச் செய்திருந்தார். (ஐ-எ)

மாணவரை பாதிக்காத வகையில் ஆசிரிய இடமாற்றங்கள் செய்யப்படும்

கல்வி அமைச்சர் பணிப்புரை

கொழும்பு, டிச. 23

ஆசிரியர்களின் இடமாற்றத்தால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட இடமளிக்கப்படமாட்டாது என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அவர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஒரு பாடசாலையில் இருந்து ஆசிரியர் ஒருவர் மாற்றம் செய்யப்படும் போது அவரது இடத்தை ஈடுசெய்யும் வகையில் மற்றுமொரு ஆசிரியரை அந்தப் பாடசாலைக்கு நியமிக்க வேண்டும் என்று அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கல்விச் சேவைக்குழு கிராமப் புறத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்பவிருக்கிறது. (ஐ-3)

72,73 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டை செல்லுபடியாகாது

கொழும்பு, டிச. 23

1972, 1973 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் அடுத்த ஆண்டில் செல்லுபடியற்றதாகி விடும் என்றும்—

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் இப் புதிய விதி பற்றி அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்களுக்கு அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1972, 73 ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று திணைக்களம் கடந்த இரண்டு ஆண்டுகளாக பொது மக்களைக் கேட்டு வந்தது என்று ஆணையாளர் கே. ஜே. பி. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஆட்பதிவுத் திணைக்களம் 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் இதுவரை ஒரு கோடி 40 லட்சத்துக்கு அதிகமான தேசிய அடையாள அட்டைகளை விநியோகித்து உள்ளது.

இந்த அட்டைகளை வைத்திருக்க வேண்டியவர்களில் 10 சதவீதமானோர் இன்னும் அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை. கொழும்பில் மாத்திரம் சுமார் 14 ஆயிரம் பேர் அடையாள அட்டை இன்றி இருக்கிறார்கள்.

திணைக்களம் 16-17 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க 3 ரூபாவைக் கட்டணமாக அறவிடுகிறது.

இந்த வயதெல்லையில் அடையாள அட்டை பெறத் தவறியோர் 10 ரூபா அபராதத் தொகை உட்பட 13 ரூபாவைச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

தமிழ்த் தொண்டாற்றிய அண்ணலே வாழ்க!

முத்தமிழ் வித்தகக் ! கி.ஆ. பெ.வி. !
எத்தனை தமிழ்த்தொண் டியற்றி இயக்கிவீர் !
இத்தனை காலம் இருந்ததன் காரணம்
சித்தத் திருந்த செந்தமிழ் ஆர்வமோ !
முற்றிப் பழுத்த தமிழ்மருந் தெல்லாம்
பற்றிப் பத்தியம் காத்ததன் பயனோ
வற்றிப் போகாத் திருக்குறள் அமுதமோ !
கற்ற சார்பில் கால்பதித் தமையோ !
என்ன சொல்லி இயம்புதல் சாலும் !
அன்னை தமிழின் அடியார் நீரலோ !
தமிழ்த்தொண் டாற்றிய அண்ணலே ! சாகா
அமிழ்தம் உண்டஉன் ஆன்மா வாழ்க !

நயினைக் கவிஞர்
நாக. சண்முகநாதபிள்ளை

Digitized by Noolaham Foundation

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது. . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இருக்கிறோம்.

எமது தரப்பில் எந்த மாற்றமும் இல்லை.

சந்திரிகா அரசு அக்கறை, ஆர்வம் குறைந்து ஏன் பேச்சுக்களைப் பின் போட்டுள்ளது?

ஜனாதிபதி சந்திரிகா நேற்று (புதன்கிழமை) ரூபவாஹினிக்கு வழங்கிய தமது பேட்டியில் —

பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆர்வம் இல்லாதது போன்ற தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரபா எழுதிய கடிதங்கள்

சந்திரிகா அரசு ஆட்சிப் பீடமேறிய இந்த மூன்றுமாத காலத்துக்குள்—

தலைவர் பிரபாகரன் இதுவரை ஒன்பது கடிதங்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த ஒன்பது கடிதங்களிலும்—

பேச்சுக்கு நாம் தயார்; போர் நிறுத்தத்துக்கு நாம் தயார்; பேச்சுவார்த்தையில் பேச வேண்டிய விடயங்கள் எவையெவை என்பதை திருப்பித் திருப்பி வலியுறுத்தியுள்ளார்.

தேவை ஏற்படும் போது இக்கடிதங்களைப் பகிரங்கப் படுத்துவோம்.

முதலில் தமிழ் மக்களின் அன்றாட—அவசர நாளாந்த — பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தக் கடிதங்களில் மாறி, மாறி தொடர்ச்சியாக தலைவர் பிரபாகரன் வலியுறுத்தியிருக்கின்றார்.

ஒக்டோபர் 13 ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெற்ற முதற் கட்டப் பேச்சுக்களின் போது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியே பேசப்பட்டது.

முதற் கட்டப் பேச்சுக்களின் ஆரம்ப உரையின் போது அரசுத் தூதுக் குழுவின் தலைவர் பாலபட்டபென்டி—

தமிழ் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் அவலமான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்துப் பேசும்படி ஜனாதிபதி சந்திரிகா தங்களுக்கு ஆணை தந்திருப்பதாக குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தான் இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளன. அவை எவை என்பதை முதற்கட்டப் பேச்சிலேயே திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டினோம்.

★ இயல்பு நிலையைத் தோற்றுவித்தல்.

★ பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்.

★ போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடல்.

★ கடல் வலயத் தடையை நீக்குதல்.

★ யாழ். குடாநாட்டில் உள்ள அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல்.

— இப்படியான அன்றாட — அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய — பிரச்சினைகள் குறித்து முதற்கட்டப் பேச்சுகளின்போது வலியுறுத்தினோம்.

தாங்கள் திரும்பிப்போய் அரச உயர்மட்டத்துடன் பேசி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுடன் வருவோம் என அரசுத் தூதுக்குழுவினர் அப்போது வாக்குறுதி அளித்திருந்தனர்.

இராணுவத்தின் நிலைப்பாடு

ஆனால் இப்போது என்ன நடக்கிறது? அவர்களுக்குச் சிக்கல் வந்திருக்கின்றது.

மேற்படி ஐந்து பிரச்சினைகளிலும் இராணுவத்தின் நிலைப்பாடும் சம்பந்தப்பட்டுள்ளது. இராணுவ இணக்கப்பாடின்றி இவற்றைத் தீர்க்க முடியாது.

தன் நிலைகளிலிருந்து ஓர் அங்குலம் தானும் விட்டுக் கொடுக்க முடியாது; பேச்சுவார்த்தைகளால் தங்கள் போர் உபாயம் பாதிக்கப்படக் கூடாது என இராணுவம் அரசுக்குத் திட்டவட்டமாகக் கூறியுள்ளதாகவும் —

அரசும் அதனை ஒப்புக் கொண்டுள்ளதாகவும் —

எமக்கு நம்பகமாகத் தெரிய வருகிறது.

அதாவது அரசுக்கு இப்போது இந்த விடயத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

எம்மைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் அரசுவேறு, இராணுவம் வேறு என பாகுபடுத்த முடியாது. இராணுவம் அரசின் அங்கமே.

அரசு விரும்பினால் இராணுவத்தின் நிலைப்பாட்டை மாற்றச்செய்யலாம். ஆனால் அதை அரசு விரும்புவதாகத் தெரியவில்லை.

நேரடியாக பேசும் நிலைப்பாடு

அன்றாடப் பிரச்சினையை முதலில் தீர்ப்பது என்று முன்னர் தெரிவித்த அரசு —

இப்போது அந்த நிலைப்பாட்டை ஒதுக்கிவிட்டு —

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்ற அடிப்படை விடயத்தை நேரடியாகப் பேசுவது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது.

அன்றாடப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண்பது என்ற விடயத்தை கைவிடுவது பற்றி அரசு எழுத்தில் நேரடியாகக் குறிப்பிடாமல் விட்டாலும், அதை கைவிட்ட தொனியிலேயே கடிதம் அனுப்பியுள்ளது.

முதல் கட்டப் பேச்சில் வலியுறுத்தப்பட்ட — இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் — என்ற அம்சம் நடைமுறைக்கு வருவதாயின் அதற்கு போர் நிறுத்தம் அவசியம்

நிலையான போர்நிறுத்தத்துக்கு அரசு தயாரில்லை

நிலையான— உருப்படியான —போர் நிறுத்தத்தையே விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர். அப்படியான போர்நிறுத்தம் வந்தால்தான் தமிழர் தாயகத்தில் உண்மையான இயல்பு நிலை தோன்றும் என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.

இதனையே தலைவர் பிரபாகரன் அரசுக்கு அனுப்பிய கடிதங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் அரசும் இராணுவமும் அத்தகைய — நிலையான— உருப்படியான— போர் நிறுத்தத்தைக் கொண்டுவர விரும்பவில்லை.

போர் நிறுத்தம் சம்பந்தமான கடிதப் போக்குவரத்து விடயத்தில் அரசு ஒருகுழப்பமான நிலையைக் கொண்டு வந்தது.

யுத்த நிறுத்தமும் மோதல் தவிர்ப்பும்

போர் நிறுத்த விவகாரத்தை மோதல் தவிர்ப்பு (Cessation Of Hostilities) என்றும் யுத்த நிறுத்தம் (Cease Fire) என்றும் அரசு. இரண்டாகப் பிரித்தது.

முதலில் மோதல் தவிர்ப்பு பின்னர் முழுமையான போர் நிறுத்தம் வரும் என்றது அரசு

உலகத்தில் இதுவரை ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஆவணங்களை நாம் படித்துள்ளோம். உண்மையான யுத்த நிறுத்தமென்றால் அது மோதல் தவிர்ப்புத்தான். இது வேறு, அதுவேறு அல்ல. இரண்டும் ஒன்றுதான்

ஆனால் அரசு அதை வேறுபடுத்தியது அவர்கள் நிலையான — உருப்படியான— யுத்த நிறுத்தத்தை விரும்பவில்லை. தற்காலிக மோதல் நிறுத்தத்தையே விரும்புகின்றனர் என்பது எமக்கு விளங்குகின்றது.

எனினும் —

தலைவர் பிரபாகரன் இதுதொடர்பாக அரசுக்கு எழுதிய கடிதத்தில் —

இந்த விடயத்தில் கருத்து முரண்பாடு தேவையில்லை. நீங்கள் விரும்பியபடி ஒரு குறுகிய காலத்துக்கு — இரு வாரங்களுக்கு போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தி பேசுவோம் என்று குறிப்பிட்டார்.

நீங்கள் இருவார காலத்துக்கு போர் நடவடிக்கைகளை நிறுத்தும் பிரகடனத்தை முதலில் வெளியிடுங்கள். அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும் அதே போன்ற பிரகடனத்தை வெளியிடுவர். இருவார காலத்துக்குப் பேசுவோம் என்று நாம் ஒப்புக் கொண்டோம். நாம் சமாதான முயற்சியைக் குழப்ப — சிக்கலாக்க — விரும்பவில்லை.

ஆனால் சமாதான — இயல்பு — நிலையைத் தோற்றுவிக்க அரசு விரும்பவில்லை; தயங்குகின்றது — என்பதை நாம் புரிந்து கொண்டோம்.

இராணுவம் நிலையான போர் நிறுத்தத்துக்கு வர விரும்பவில்லை.

ஏதோ இருவாரங்களுக்குப் பேச்சு நடத்துவோம். பின்னர் தேவைப்பட்டால் — சில சமயங்களில் — அதனை நீடிக்கலாம் என அரசாங்கம் யோசித்திருக்கலாம்.

வெறும் போர் நிறுத்த அறிவித்தலை விடுப்பதில் அர்த்தமில்லை; அதனைச் சரியாகப் பேணவேண்டும்; அதற்குரிய வழிமுறைகள் குறித்துப் பேச வேண்டும் எனத் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தினார்.

போர் நிறுத்தத்துக்கு ராணுவம் எதிர்ப்பு

அதற்காக 22 ஆம், 23 ஆம் திகதிகளில் ஒரு தூதுக்குழு — போர் நிறுத்தம் குறித்துப் பேச — வரும் என அரசு எமக்கு அறிவித்தது.

போர் நிறுத்தத்துக்கு இராணுவம் எதிர்ப்புத் தெரிவித்ததால் அத்தகைய தூதுக் குழு வராமல் போனது.

பொருளாதாரத் தடை

அடுத்தது பொருளாதார தடையை நீக்குவது. —

இதற்கும் இராணுவம் விரும்பவில்லை.

எரிபொருள், வாகனங்கள், உரவகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவர இராணுவம் எதிர்ப்பாக உள்ளது.

28 பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அவை பெரிய அளவில் இங்கு எடுத்துவர அனுமதிக்கவில்லை. இராணுவம் முட்டுக்கட்டை போடுகின்றது.

போக்குவரத்துத் தடை

போக்குவரத்துத் தடையை நீக்குவது மூன்றாவது விடயமாகும்.

பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று பூநகரிப் பாதையைத் திறக்கும்படி நாம் வலியுறுத்துகின்றோம். ஆனால் இராணுவம் பூநகரியிலிருந்து வெளியேற விரும்பவில்லை.

கடல்வலயத் தடை

கடல் வலயத் தடைச் சட்டத்தைநீக்குவது நான்காவது விடயம்.

கடந்த பத்து வருடங்களாக எமது மீனவ சமுதாயம் கடற்பிரதேசங்களில் நிகழும் அக்கிரமங்களினால் தொழிலிழந்து — பாதிக்கப்பட்டு — அவலங்களுக்கு ஆளாகியிருக்கிறது.

அதை நீக்க—மீனவர் கடற்றொழில் செய்ய அனுமதிக்க — ஆயுதப்படை, கடற்படை இணங்குவதாகத் தெரியவில்லை.

அகதிகள் பிரச்சினை

குடாநாட்டில் உள்ள இரண்டரை லட்சம் அகதி மக்கள் தங்கள் தாயகத்துக்குத் திரும்ப விரும்புகின்றனர். இது ஐந்தாவதுவிடயம்.

ஏராளமான குடியிருப்புப் பிரதேசங்கள் — குறிப்பாக அளவெட்டி முதல் மாதகல் வரை மற்றும் தீவுப்பகுதிகள் — இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

மக்கள் மீளக்குடியமர்வதாயின் அதற்கு இராணுவம் அந்தப் பகுதியிலிருந்து விலக வேண்டும். ஆனால் இராணுவம் அதற்கும் விரும்பவில்லை.

எனவே —

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தமான ஒவ்வொரு விடயத்திலும் இராணுவம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆனால் இராணுவம் கடுமையாக நிற்கின்றது.

இதனால் மக்களின் அன்றாட — அத்தியாவசிய — பிரச்சினைகளிலிருந்து வெட்டி ஒடி, அவற்றை ஒரங்கட்டிவிட்டு நேரடியாக இனப்பிரச்சினை பற்றிப் பேச அரசு முயல்கிறது.

தலைவர் பிரபா வலியுறுத்துவது

''சமாதான வழிமுறை [Peace Process] என்பது இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் இறுதியான நோக்கத்தைக் கொண்டது என்பது எமக்குத் தெரியும். அதைக் கொள்கை அளவில் நாம் ஏற்கின்றோம். ஆனால் அந்த சமாதான வழிமுறை கட்டம் கட்டமாக நடைபெற வேண்டியது அவசியமாகும்'' — எனத் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தி வருகின்றார்.

நாற்பது ஆண்டுகால இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காணமுடியாது. முதல் கட்டமாக அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்; அதன் மூலம் இயல்பு நிலை தோன்ற வேண்டும்; மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும்; மக்களின் பளுவைக் குறைக்க வேண்டும். அதன் மூலம் மக்களுக்கு நிம்மதியான — ஒய்வான — வாழ்வைக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும். நல்லெண்ணம் தோன்றும்.

''அப்படியான சூழ்நிலை தோற்றுவித்த பின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றி விவாதிப்போம்— என்று தலைவர் பிரபாகரன் தனது கடிதங்களில் வலியுறுத்தியுள்ளார்.

எமது இந்த யோசனைகளுக்கு எதிர்ப்பு ஏதும் கூறாமல் — கடைசி நேரத்தில் — 20 ஆம் திகதியன்று தங்களுக்கு ஒரு விளக்கம் தேவை என அரசு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

யுத்த நிறுத்தம் வந்தகையோடு — உடனடியாக — இனப்பிரச்சினை குறித்துப் பேச புலிகள் தயாரா என்று கேட்டு — நுட்பமான முறையில் — கடிதம் அனுப்பியிருக்கிறார் அனுருத்த ரத்வத்தை.

நாம் திருப்பித் திருப்பி வலியுறுத்திய — மக்களின் அன்றாடப் பிரச்சினை குறித்து— அந்தக் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இக்கடிதத்துக்கு தலைவர் இன்று(வியாழக்கிழமை) பதில் அனுப்பியுள்ளார்.

பேச்சுக்கள் கட்டம்கட்டமாக என பிரபா பதில்

பேச்சுக்கள் கட்டம் கட்டமாக தொடரவேண்டும் என தலைவர் பிரபாகரன் இந்தப் பதிலில் வலியுறுத்தியுள்ளார்.

முதல்கட்டப் பேச்சு தமிழ் மக்களின் அத்தியாவசிய — அன்றாட — பிரச்சினைகள் பற்றியதாக அமைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

யுத்தத்தின் மூல வேர்களை ஆராய்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்துபேச்சு நடத்துவோம் என அனுருத்த தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் — யுத்தத்தின் மூல வேர்களை ஆராய முன்னர், யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட — மக்கள் எதிர்நோக்கும் — பிரச்சினைகளை, அவலங்களை களைவது குறித்து முதலில் பேசுவோம் என அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய பதில் கடிதத்தில் தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இதுதான் இன்றைய சிக்கலான நிலை.

நாம் எப்படி நம்புவது?

இராணுவத்தை ஒரு சிறிது தூரம் விலக்கி, பாதையைத் திறக்க முடியாத அரசு —

நாற்பது வருட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்றோ அல்லது அதன் மூலம் தமிழர் தாயகத்திலிருந்து முற்றாக இராணுவத்தை வாபஸ் பெறச் செய்யும் என்றோ நாம் எப்படி நம்புவது?

போர் நிறுத்தம் செய்ய நாம் எப்போதும் தயார்; பேச்சுக்கும் நீங்கள் எப்போதும் வரலாம். சமாதானக் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. ஆனால் முதலில் மக்களின் அன்றாடப் பிரச்சினை குறித்தே பேச வேண்டும். என்று தலைவர் பிரபாகரன் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இனி முடிவு எடுக்க வேண்டியது அவர்கள்தான். (அரசுதான்).

எனவே அரசு சிலசமயம் சாதகமான முறையில் முடிவு எடுத்து பதில் அளிக்கக்கூடும். அப்படி நடந்தால் பேச்சு நடக்கும்

ஆகவே —

பேச்சுவார்த்தை நடப்பது அரசின் கைகளில்தான் இருக்கின்றது.

— இவ்வாறு திரு. பாலசிங்கம் தெரிவித்தார். (உ-3)

அரசுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகாட்டி செயற்படுகின்றார். எனவே எம்மீது வெறுமனே (சும்மா) பழி போட அரசு முயலக் கூடாது. — என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் பிரபாகரன் நேற்று பதில் அனுப்பிவைத்துள்ளார்.

''சமாதான வழிமுறை என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் இறுதியான இலக்கை நோக்கமாகக் கொண்டது என்பது எமக்குத் தெரியும். ஆனால் அந்த வழிமுறை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டும். முதல் கட்டமாக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றியே பேச வேண்டும். இயல்பு நிலையை தோற்றுவித்த பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயலாம்''. — என்றும் ஜனாதிபதி சந்திரிகா 'ரைம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். [ஒ-எ-3]

பாப்பரசர் வருகை அரசியல் தீர்வுக்கு தூண்டுகோலாக அமையும்

அதிவண. மல்கம் ரஞ்சித் நம்பிக்கை

கொழும்பு, டிச. 23

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சியில் பாப்பரசரின் விஜயம் தூண்டு கோலாக அமையும் என திருச்சபை கருதுகிறது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கொழும்பு மேலதிக மேற்றிராணியார் அதிவண. மல்கம் ரஞ்சித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் விஜயம் சர்வமத சமரசத்தை உறுதிப்படுத்தி அனைத்து மக்களுக்கிடையிலும் நல்லெண்ணத்தை வளர்த்து, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக அமைதல் வேண்டும்.

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வடக்கிலிருந்து சுமார் 7,000 தமிழ் யாத்திரிகர்கள் வரக்கூடும். இதற்கான ஏற்பாடுகளை திருச்சபை மேற்கொண்டுள்ளது.

இத்தகைய பிச்சினைகள் உலகின் ஏனைய பகுதிகளில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஐ. ஆர். ஏக்கும் பிரித்தானிய அரசுக்கும் இடையிலும்—

பி. எல். ஓவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலும்— ஏற்பட்ட நிலைமை சிறந்த உதாரணங்களாகும். இது இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிவகுக்க இயலும்.

இப்படி அவர் கூறினார்— பாப்பரசரின் விஜயம் சமயப் பிரசார விஜயம் அல்ல என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். (இ-க-6)

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை:

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாக 45 சதவீதமானோர் தகுதி

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தர பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளில் 45 சதவீதமானவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படுவதற்கான ஆகக் குறைந்த தகைமைகளைப் பெற்றுள்ளனர் என பரீட்சைத் திணைக்களம் கூறுகின்றது.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 141 பேர் நான்கு பாடங்களிலும் விசேடதிறமை பெற்றிருக்கிறார்கள்.

இவர்களில் அதிக மாணவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்த முறை ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 345பேர் தோற்றினார்கள்.

உயிரியல் விஞ்ஞானத்துறையில் 9,307 பேரும் —

கணிதத் துறையில் 3,609 பேரும் —

வர்த்தகத்துறையில் 17,104 பேரும் —

கலைத் துறையில் 26,718 பேரும் —

இம்முறை சித்தி அடைந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 28 பேரும், கண்டி மாவட்டத்தில் 16 பேரும் கொழும்பு மாவட்டத்தில் 57 பேரும் நான்கு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கிறார்கள்.

பரீட்சைக்குத் தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் 56,738 பேர் பல்கலைக் கழங்களில் பிரவேசிப்பதற்கு ஆகக் குறைந்த தகைமைகளை பெற்றுள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

உணவுப் பொருள்களை மூடாமல் விற்பது தண்டனைக்குரிய குற்றம்

சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 23

உடனடி போசனை உணவுப் பொருள்களான வறுத்த கடலை, சோளம், தோல் நீக்கிய அன்னாசி, வெட்டிய பலாப்பழம், உறையிடப்படாத மிட்டாய் வகைகள், வெட்டிய மாங்காய், அப்பிள், ஈச்சம்பழம், அப்பம், இடியப்பம், பிட்டு, தோசை போன்றவை ஈக்கள் மொய்க்காதவாறு, தூசி படியாதவாறு மூடி விற்பனை செய்யப்பட வேண்டும்.

சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கும் வகையில் இவற்றை விற்பனை செய்வது தமிழீழ் உணவுச் சட்டத்தின் கீழ். தண்டனைக்குரிய குற்றம் ஆகும்.

மேற்கண்டவாறு சுகாதாரச் சேவைகள் பணியகம் அறிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் பொதுயிடப்படும் சகல மனித போசனைக் கான உணவுப் பொருள்களும் (குளிர்பான உட்பட) சுட்டுத் துண்டிடுதல் வேண்டும்.

அதில் உணவின் அளவு. பண்பு, பெறுமதி, சேர்வை, தயாரிக்கப்பட்ட நாள், காலாவதி நாள், தயாரிப்பு நிலையம், முகவரி போன்ற விவரங்கள் இருந்தாலன்றி விற்பனை செய்தலோ அல்லது வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது

இத்தடை விதிப்பை அமுல் படுத்த தமிழீழ உணவுச் சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட சகல அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுவர்.

பறிமுதல், தண்டனை ஆகியவற்றைத் தவிர்க்க இதில் ஈடுபட்டுள்ள சகல வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் பொதுமக்கள் நலன் கருதி சுகாதாரத்தைப் பேண எம்முடன் ஒத்துழைக்கவேண்டும்.

உடல் நலத்தையும், பொருளாதாரச் சிதைவையும் கருத்திற்கொண்டு, சுகாதாரப் பாதுகாப்பின்றி வைத்திருக்கும் இடங்களிலிருந்து உணவுப் பண்டங்களை வாங்கவேண்டாமெனதமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (க)

அனுராவுக்கு சத்திரசிகிச்சை

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் விபத்துக்குள்ளாகி காயப்பட்டு அண்மையில் நாடு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தமது இடது கணுக்காற் பகுதியில் உடனடி சத்திர சிகிச்சை செய்வதற்காக நேற்றுக் கொழும்பு பெரியபஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-க-6)

மன்னார் வளைகுடாவில் தாழமுக்கம்

சென்னை, டிச. 23

வங்கக் கடலில் மன்னார் வளைகுடாவில் இருந்து தெற்கு ஆந்திரக் கடலோரம் வரை கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து காணப்படும் தாழமுக்கம் காரணமாக இன்னும் ஓரிரு நாட்களுக்கு மழை தொடரும் என்று சென்னை வானிலை அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (ஒ-4)

வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கா தான் 1956 தேர்தலில் வெற்றிபீடுவதற்காக சிங்கள ஆதரவு கொள்கைகளை முதல்தடவையாக வெளியிட்டார்.

அந்தக் கொள்கையே இந்த இளம் நாட்டை இனச் சண்டையின் பாதையில் தள்ளிவிட்டது பெரும்பாலும் அவரது புதல்வி இந்தச் சரித்திரத் தவறை சரிசெய்வார்''— என்றும் ரைம் சஞ்சிகை கருத்து வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ-3)

அதிகாரங்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான தயாரிப்பில் சந்திரிகாவின் ஆலோசகர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் 'ரைம்' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தமிழ் மக்களிடம் சில முக்கிய நீதியான கோரிக்கைகள் உள்ளன என நாம் நம்புகின்றோம். அரசு உத்தியோக ரீதியாக தமிழர்களை பாரபட்சமாக நடத்தவில்லை; ஆனால் அது நடக்கலாம்.—என்றும் ஜனாதிபதி சந்திரிகா 'ரைம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். [ஒ-எ-3]

மாஹோவில் ம.எண்ணெய் அடுத்தவாரம் வந்து சேரும்

சிமெந்தும் எடுத்து வரப்படும்

யாழ்ப்பாணம், டிச. 23

யாழ். மாவட்டத்துக்கான எண்ணாயிரம் பரல் மண்எண்ணெய் ''மாஹோர்'' கப்பலில் அடுத்தவாரம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் தற்சமயம் மண்எண்ணெயை ஏற்றிக் கொண்டிருக்கும் இந்தக் கப்பல் எதிர்வரும் 27 ஆம் திகதி வ/டக்கு நோக்கிப் புறப்படும் என்றும்—

30 ஆம் திகதியளவில் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் 10 ஆயிரம் பக்கற் சிமெந்தும் எடுத்து வரப்படவிருக்கின்றது. (ஒ-3)

ரூ.80 லட்சம் சம்பளம் கொள்ளை:

முக்கிய சந்தேகநபர் கம்பஹாவில் நேற்று கைது

துப்பாக்கிச் சமரும் நடந்தது

கொழும்பு, டிச. 23

வியாங்கொடையில் அண்மையில் வியாடெக்ஸ் நிறுவனத்துக்கு உரிய 80 லட்சம் ரூபா சம்பளப்பணம் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரை நேற்றுக் காலை கம்பஹாவில் இந்து கல என்ற இடத்தில் வைத்து பொலீஸார் கைது செய்தனர்.

அச்சமயம் பொலீஸாருடன் நடந்த துப்பாக்கிச்சமரில் சந்தேக நபர் காயமடைந்தார் என்றும்—

அவர் சிகிச்சைக்காக தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளைப் பணத்தின் ஒரு பகுதியையும் ஒரு ரிவோல்வர் ஒரு சாதாரண துப்பாக்கி, ஒருகைக் குண்டு ஆகியவற்றையும் அத்தனகலைப் பொலீஸார் மீட்டுள்ளனர். (ஒ-எ)

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org